தினமணி

## இணையதளம் மூலம் ஊராட்சிகள் இணைப்பு

First Published : 09 Jan 2010 06:10:17 AM IST
Last Updated : 09 Jan 2010 09:24:05 AM IST

திண்டுக்கல், ஜன. 8: திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளும் இணையதளம் மூலம் இணைக்கப்பட்ட பின்னர் விவசாயிகளின் குறைகள் விரைவில் தீர்க்கப்படும் என மாவட்ட ஆட்சியர் மா. வள்ளலார் தெரிவித்தார்.

திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்துக்கு தலைமை வகித்து ஆட்சியர் பேசியது:

மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளும் இணையதளம் மூலம் இணைக்கப்படும். இதன் மூலம் விவசாயிகள் தங்களது கோரிக்கைகள், சந்தேகங்கள் ஆகியவற்றை ஊராட்சியில் இருந்தபடியே கேட்கலாம். அதற்கு உரிய பதில்கள் இணைய தளம் மூலம் வழங்கப்படும்.

திண்டுக்கல்லில் வரும் ஜன. 23 ஆம் தேதி முதல் 26 ஆம் தேதி வரை வேளாண்மை கண்காட்சி நடத்தப்பட உள்ளது. திண்டுக்கல் மாவட்டத்தில் நீராதாரங்களைப் பெருக்குவதற்காக பல்வேறு திட்டங்கள் மூலம் குளங்களை ஆழப்படுத்துதல், வரத்து வாய்க்கால்களைச் செப்பனிடுதல் போன்ற கோரிக்கை நிவர்த்தி செய்ய உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

ஒட்டன்சத்திரம் சடையன் குளம் நீர்ப் பாசன விவசாயிகள் கோரிக்கைப்படி ஆக்கிரமிப்பை அகற்ற உத்தரவிடப்பட்டுள்ளது.

செயற்கைக்கோள் மூலம் எடுக்கப்பட்ட படங்களைக் கொண்டு ஆர். கோம்பையில் 25 குளங்களைத் தூர்வாரி, அந்தக் குளங்களில் வரத்து வாய்காலை ஒன்றிணைக்கும் பணி செயல்பட்டு வருகிறது என்றார் ஆட்சியர்.

## கொடைக்கானலில் யூகலிப்டஸ் தைலம் தயாரிப்பு வீழ்ச்சி

ம.அ. ஆரோக்கியசுவாமி
First Published : 09 Jan 2010 06:09:44 AM IST
Last Updated : 09 Jan 2010 09:23:58 AM IST

கொடைக்கானல், ஜன.8: கொடைக்கானலில் யூகலிப்டஸ் மரங்களின் இலைகள் கிடைப்பது குறைந்து வருவதால் தைலம் தயாரிப்பு வீழ்ச்சியடைந்து வருகிறது.

கொடைக்கானல் மேல் மலைப் பகுதிகளான பூம்பாறை, மன்னவனூர், கூக்கால், குண்டுபட்டி, போலூர், அட்டுவம்பட்டி, மாட்டுப்பட்டி, பள்ளங்கி, கோம்பை, கொடைக்கானல், கிளாவரை உள்பட பல கிராமப் பகுதிகளில் சுமார் 25 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் யூகலிப்டஸ் மரங்கள் வளர்கின்றன.

கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பு வனப் பகுதிகளில் உள்ள யூகலிப்டஸ் மரத்தின் இலைகளைக் காய்ச்சி தைலம் தயாரித்தனர். கொடைக்கானலில் இருந்து மதுரை, சென்னை, திருச்சி, பெங்களூரு ஆகிய இடங்களுக்கு தைலத்தை தயாரிப்பாளர்கள் அனுப்பி வைக்கின்றனர். கொடைக்கானல் வரும் சுற்றுலாப் பயணிகள் யூகலிப்டஸ் தைலத்தை வாங்கிச் செல்வது வழக்கம்.

இந்தத் தொழிலை நம்பி 100-க்கும் மேற்பட்டவர்கள் கொடைக்கானல் பகுதிகளில் குடிசைத் தொழில் செய்து வந்தனர். மழை பெய்தால் யூகலிப்டஸ் மரம் விரைவில் வளரும் தன்மை கொண்டது. இதனால் இந்த இலை எளிதாகக் கிடைக்கும். மழைக் காலங்களில் இலைகளை சேகரிக்க முடியாது. மழைக்குப் பின் அல்லது முன் இலைகளை தைலத் தயாரிப்பாளர்கள் சேகரித்து வைப்பது வழக்கம்.

காலப் போக்கில் வனப் பகுதிகளுக்கு யாரும் செல்லக் கூடாது என வனத் துறையினர் கட்டுப்பாடு விதித்தனர். இதனால் யூகலிப்டஸ் இலைகளை எடுப்பதில் பல்வேறு பிரச்னை ஏற்பட்டது. எனவே பலர் தைலம் தயாரிக்கும் தொழிலை விட்டு விட்டனர்.

இதனால் தைலம் உற்பத்தி குறைந்தது. அதன் விலையும் அதிகரித்துள்ளது. 75 மி.லி. தைலம் முன்பு ரூ.50-க்கு விற்பனை செய்யப்பட்டது. தற்போது ரூ.75-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

இது குறித்து தைலம் தயாரிப்பாளர் மற்றும் விற்பனையாளர் முகுந்தன் கூறியதாவது:

கொடைக்கானலில் 25 ஆண்டுகளுக்கு மேலாக நாங்கள் தைலம் தயாரிப்பது மற்றும் விற்பனை செய்து வருகிறோம். முன்பெல்லாம் வனப்பகுதிக்குச் சென்று யூகலிப்டஸ் இலைகளை எடுக்கத் தடையில்லை. குறைந்த விலை கொடுத்து தைல இலைகளை எடுத்து வந்து அதைக் காய்ச்சி விற்பனை செய்தோம்.

ஆனால் கடந்த பல ஆண்டுகளாக வனப்பகுதிகளில் வீணாகச் செல்லும் யூகலிப்டஸ் இலைகளை எடுக்க வனத் துறையினர் தடை விதித்துள்ளனர். இதனால் நாங்கள் பட்டா காடுகள் வைத்திருப்பவர்களிடம் யூகலிப்டஸ் இலைகளை விலை கொடுத்து வாங்கித் தைலம் தயாரித்து விற்பனை செய்து வருகிறோம்.

இதனால் அதிக விலைக்கு விற்பனை செய்ய வேண்டியுள்ளது. இந்தத் தைலத்தை பயன்படுத்தினால் கை, கால், தலை வலி நீங்கும் தன்மை கொண்டதாக இருப்பதால் இவற்றை பொது மக்கள் வாங்கிச் செல்கின்றனர்.
வனத்துறையினர் வனப் பகுதிகளில் உள்ள யூகலிப்டஸ் இலைகளை குறைந்த விலைக்குக் கொடுத்து தைலம் தயாரிக்கும் தொழிலை மேம்படுத்த வேண்டும். அவ்வாறு இல்லையெனில் வரும் காலங்களில் மூலிகை மருத்துவ குணம் கொண்ட யூகலிப்டஸ் தைலம் கிடைப்பது அரிதாகிவிடும் என்றார்.

### தோட்டக் கலை கல்லூரி முதன்மையருக்கு தேசிய விருது

First Published : 09 Jan 2010 02:28:28 AM IST
Last Updated : 09 Jan 2010 09:20:06 AM IST

கோவை, ஜன.8: இந்திய தோட்டக்கலைக் குழுமத்தின் ஸ்ரீகிரிதாரி நினைவு விருது மற்றும் தங்கப் பதக்கம், தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தின் தோட்டக்கலைக் கல்லூரி முதன்மையர் நீ.குமாருக்கு வழங்கப்பட்டுள்ளது.

தில்லியில் அண்மையில் நடைபெற்ற விழாவில் வேளாண்மை பணி நியமன வாரிய தலைவர் சி.டி. மாயி இவ் விருதை வழங்கினார். பழப்பயிர் ஆராய்ச்சிக்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு வேளாண் பல்கலை.யில் இவ்விருதைப் பெறும் முதல் விஞ்ஞானி இவர்.

நூற்புழுவிற்கு எதிர்ப்புத் திறனுள்ள ஒட்டுரக வாழை, பல்வகை எதிர்ப்புத் திறனுள்ள வீரிய ஒட்டுரகம் ஆகியன வேளாண் பல்கலை.யின் மூலம் பல்வேறு ஆராய்ச்சித் திடல்களில் பயிரிடப்பட்டு பரிசோதனையில் உள்ளன.

பப்பாளியில் அதிக மகசூல் பெறுவதற்கான சமச்சீர் உர அளவு உள்ளிட்ட தொழில்நுட்பங்களை வகுத்துள்ளார். ஏற்கெனவே பல்வேறு அமைப்புகள் வழங்கிய 5 விருதுகளைப் பெற்றுள்ளார்.

### பிப்.6-ல் தமிழக விவசாயிகள் சங்க மாநில மாநாடு

First Published : 09 Jan 2010 06:41:46 AM IST

வேலூர்,ஜன. 8: தமிழக விவசாயிகள் சங்க மாநில மாநாடு பிப். 6}ம் தேதி வேலூரில் நடைபெறுகிறது என்று சங்க மாநிலத் தலைவர் எம்.ஆர்.சிவசாமி கூறினார்.

சங்க ஆலோசனைக் கூட்டம் வேலூரில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில், எம்.ஆர்.சிவசாமி பேசியது: சங்க நிறுவனர் நாராயணசாமி பிறந்த நாளான பிப். 6}ம் தேதி, தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாநில மாநாட்டை வேலூரில் நடத்த திட்டமிட்டுள்ளோம்.

கடந்த சில ஆண்டுகளாக மத்திய, மாநில அரசுகள் விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்பதில்லை. ஜூலை மாத இறுதியில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் ஒன்றாக திரண்டு சென்னையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளோம்.

விவசாய உற்பத்தியைப் பெருக்காதவரை, விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த முடியாது. மக்களைப் பற்றிக் கவலைப்படாமல் வாக்கு வங்கிக்காகவே அரசின் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன.

தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தை விவசாய பணிகளுக்கு பயன்படுத்த வேண்டும் என்றார். மாநிலப் பொருளாளர் கே.வெங்கடாசலம், துணைத் தலைவர் கே.எம்.ராமகவுண்டர், கிருஷ்ணகிரி மாவட்டத் தலைவர் ஏ.ராமசாமி கவுண்டர் உள்ளிட்டோர் பேசினர்.

கூட்டத்தில் கரும்பு விலை டன்னுக்கு ரூ.2,500 நிர்ணயம் செய்ய வேண்டும்.

தேங்காய் விலை வீழ்ச்சியை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாய குடும்பத்துக்கு மாத ஊதியம் ரூ.5 ஆயிரம் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### பயிர்க் காப்பீட்டுக்கு விண்ணப்பிக்கலாம்

First Published : 09 Jan 2010 04:26:47 AM IST
Last Updated : 09 Jan 2010 09:29:04 AM IST

புதுக்கோட்டை, ஜன. 8: 2009-2010-ம் ஆண்டு "ராபி' பருவப் பயிர்களுக்கு காப்பீடு செய்ய விவசாயிகள் விண்ணப்பிக்கலாம் என்று தேசிய வேளாண் காப்பீடு நிறுவனம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து அந்நிறுவனத்தின் மண்டல மேலாளர் சி. அன்பரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு:
""தேசிய வேளாண் காப்பீடுத் திட்டத்தின் மூலம் அனைத்து விதமான உணவுப் பயிர்கள் (தானியங்கள், சிறு தானியங்கள்) பயறு வகைகள் எண்ணெய் வித்துக்கள் மற்றும் வணிக தோட்டக்கலைப் பயிர்கள் காப்பீடுசெய்யப்படுகின்றன.

இதில், நெல், கேழ்வரகு, சோளம், கம்பு, நிலக்கடலை, எள், உளுந்து. கொள்ளு, பருத்தி, கரும்பு, உருளைக்கிழங்கு, வாழை, மிளகாய், மரவள்ளிக்கிழங்கு, மஞ்சள் வெங்காயம் ஆகிய பயிர்களும் அடங்கும்.

அனைத்து விதமான இயற்கைச் சீற்றங்களினால் (வெள்ளம், வறட்சி, பூச்சித் தாக்குதல் மற்றும் நோய்கள்) ஏற்படும் மகசூல் இழப்புக்கு இத்திட்டத்தில் காப்பீடு பெறலாம். மேலும், குத்தகைதாரர், வங்கி கடன் பெறுவோர் மற்றும் கடன் பெறாதோர் உள்ளிட்ட அனைத்து விவசாயிகளும் இத்திட்டத்தில் சேர்ந்து பயன் பெறலாம். சராசரி மகசூலின் 150 சதம் மதிப்பு வரை காப்பீடுசெய்யலாம்.

இத்திட்டத்தில் கடந்த 2000 முதல் 2008 வரை விவசாயிகளிடமிருந்து பிரிமியமாக ரூ. 116 கோடி பெறப்பட்டு, இழப்பீடாக ரூ. 1171 கோடி அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 8 லட்சம் விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர். கடந்த ஆண்டில் தமிழகத்தின் 18 மாவட்டங்களைச் சேர்ந்த 5 லட்சம் விவசாயிகளுக்கு ரூ. 651 கோடி தொகை நஷ்ட ஈடாக வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், நிகழாண்டில் "ராபி' பருவத்துக்கான பயிர்க் காப்பீடு இப்போது செய்யப்படுகிறது. அரசு மானியம் போக ஒரு ஏக்கருக்கு செலுத்த வேண்டிய காப்பீட்டுக் கட்டணம், கடைசி தேதி குறித்த விவரம் வருமாறு:
நெல் (நவரை, கோடை): கடன் பெறும் விவசாயிகள் : கட்டணம் ரூ. 330, கடைசி தேதி 31.3.2010. கடன் பெறாத விவசாயிகள் - சிறு, குறு விவசாயிகள்: கட்டணம் ரூ. 330, மற்ற விவசாயிகளுக்கு ரூ. 336. கடைசி தேதி 15.3.2010.
கம்பு: கடன் பெறும் விவசாயிகளுக்கு ரூ. 236, கடைசி தேதி 31.3.2010. கடன் பெறாத விவசாயிகள் - சிறு, குறு விவசாயிகளுக்கு ரூ. 236, மற்ற விவசாயிகளுக்கு ரூ. 262, கடைசி தேதி 15.1.2010.

சோளம்: கடன் பெறும் விவசாயிகளுக்கு ரூ. 181. கடைசி தேதி 31.3.2010. கடன் பெறாத விவசாயிகள் - சிறு, குறு விவசாயிகளுக்கு ரூ. 181, மற்ற விவசாயிகளுக்கு ரூ. 201. கடைசி தேதி 15.1.2010.

கேழ்வரகு: கடன் பெறும் விவசாயிகளுக்கு ரூ. 179. கடைசி தேதி 31.3.2010. கடன் பெறாத விவசாயிகள் - சிறு,குறு விவசாயிகளுக்கு ரூ. 179. மற்ற விவசாயிகளுக்கு ரூ. 199, கடைசி தேதி 15.1.2010.

மக்காச்சோளம்: கடன் பெறும் விவசாயிகளுக்கு ரூ. 49. கடைசி தேதி 31..3.2010. கடன் பெறாத விவசாயிகள் - சிறு, குறு விவசாயிகளுக்கு ரூ. 49. மற்ற விவசாயிகளுக்கு ரூ. 54. கடைசி தேதி 15.1.2010.

நிலக்கடலை: கடன் பெறும் விவசாயிகளுக்கு ரூ. 476. கடைசி தேதி: 31.3.2010. கடன் பெறாத விவசாயிகள் - சிறு, குறு விவசாயிகளுக்கு ரூ. 476. மற்ற விவசாயிகளுக்கு ரூ. 528, கடைசி தேதி 15.1.2010.

எள்: கடன் பெறும் விவசாயிகளுக்கு ரூ. 167. கடைசி தேதி 31.3.2010. கடன் பெறாத விவசாயிகள் - சிறு, குறு விவசாயிகளுக்கு ரூ. 167. மற்ற விவசாயிகளுக்கு ரூ. 185. கடைசி தேதி 15.1.2010.

சூரியகாந்தி: கடன் பெறும் விவசாயிகளுக்கு ரூ. 436, கடைசி தேதி 31.1.2010. கடன் பெறாத விவசாயிகள் - சிறு, குறு விவசாயிகளுக்கு கட்டணம் ரூ. 436. மற்ற விவசாயிகளுக்கு ரூ. 484. கடைசி தேதி 15.1.2010.

உளுந்து: கடன் பெறும் விவசாயிகளுக்கு ரூ. 21, கடைசி தேதி 31.3.2010. கடன் பெறாத விவசாயிகள் - சிறு, குறு விவசாயிகளுக்கு ரூ. 21. மற்ற விவசாயிகளுக்கு ரூ. 23. கடைசி தேதி 15.2.2010.

பச்சைப்பயறு: கடன் பெறும் விவசாயிகளுக்கு ரூ. 124. கடைசி தேதி 31.3.2010. கடன் பெறாத விவசாயிகள் - சிறு, குறு விவசாயிகளுக்கு ரூ. 124. மற்ற விவசாயிகளுக்கு ரூ. 138. கடைசி தேதி 15.2.2010.

கொள்ளு: கடன் பெறும் விவசாயிகளுக்கு ரூ. 105. கடைசி தேதி 31.3.2010. கடன் பெறாத விவசாயிகள் - சிறு குறு விவசாயிகளுக்கு ரூ. 105. மற்ற விவசாயிகளுக்கு ரூ. 116, கடைசி தேதி 15.1.2010.

பணப் பயிர் மற்றும் தோட்டக்கலைப் பயிர்கள்:
நெல், தரிசில் பருத்தி: கடன் பெறும் விவசாயிகளுக்கு ரூ. 1684. கடைசி தேதி 31.3.2010. கடன் பெறாத விவசாயிகள் - சிறு, குறு விவசாயிகளுக்கு ரூ 1684, மற்ற விவசாயிகளுக்கு ரூ 1871, கடைசி தேதி 15.2.2010.

பருத்தி: கடன் பெறும் விவசாயிகளுக்கு ரூ. 649. கடைசி தேதி 31.3.2010. கடன் பெறாத விவசாயிகள் - சிறு, குறு விவசாயிகளுக்கு ரூ. 649. மற்ற விவசாயிகளுக்கு ரூ. 721. கடைசி தேதி 15.1.2010.

மிளகாய்: கடன் பெறும் விவசாயிகளுக்கு ரூ. 574. கடைசி தேதி 31.3.2010. கடன் பெறாத விவசாயிகள் - சிறு, குறு விவசாயிகளுக்கு ரூ. 574. மற்ற விவசாயிகளுக்கு ரூ. 638. கடைசி தேதி 15.1.2010.

வாழை: கடன் பெறும் விவசாயிகளுக்கு ரூ. 7, 411. கடைசி தேதி 28.2.2010. கடன் பெறாத விவசாயிகள் - சிறு, குறு விவசாயிகளுக்கு ரூ. 7, 411. மற்ற விவசாயிகளுக்கு ரூ 8,234. கடைசி தேதி 15.1.2010.

மரவள்ளி: கடன் பெறும் விவசாயிகளுக்கு ரூ. 2, 200. கடைசி தேதி 28.2.2010. கடன் பெறாத விவசாயிகள் - சிறு, குறு விவசாயிகளுக்கு ரூ. 2, 200. மற்ற விவசாயிகளுக்கு ரூ. 2, 444, கடைசி தேதி 15.1.2010.

வெங்காயம்: கடன் பெறும் விவசாயிகளுக்கு ரூ. 938. கடைசி தேதி 31.1.2010. கடன் பெறாத விவசாயிகள் - சிறு, குறு விவசாயிகளுக்கு ரூ. 938. மற்ற விவசாயிகளுக்கு ரூ. 1042. கடைசி தேதி 15.1.2010.

கரும்பு: கடன் பெறும் விவசாயிகளுக்கு ரூ. 788. கடைசி தேதி 31.12.2010. கடன் பெறாத விவசாயிகள் - சிறு, குறு விவசாயிகளுக்கு ரூ. 788. மற்ற விவசாயிகளுக்கு ரூ. 876. கடைசி தேதி 31.10.2010.

உருளைக்கிழங்கு: கடன் பெறும் விவசாயிகளுக்கு ரூ. 410. கடைசி தேதி 30.6.2010. கடன் பெறாத விவசாயிகள் - சிறு குறு விவசாயிகளுக்கு ரூ. 410. மற்ற விவசாயிகளுக்கு ரூ. 456. கடைசி தேதி 15.4.2010.
இதில், மக்காச்சோளம், உளுந்து ஆகிய பயிர்களுக்கு உத்தரவாத மகசூல் கணக்கிடப்படும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு வட்டாரத்திலும் பிர்காவிலும் மாநில அரசின் வேளாண் துறையினரால் பயிர் அறுவடைக் காலத்தில் (16-10) பயிர் அறுவடை சோதனைகள் நடத்தப்பட்டு, நடப்பு பருவத்தின் சராசரி மகசூலை கடந்த 3 அல்லது 5 ஆண்டு கால உத்தரவாத மகசூலோடு ஒப்பிடும்போது நடப்புப் பருவத்தின் மகசூல் எந்த அளவு குறைந்துள்ளதோ அந்த விகிதப்படி அவ்வட்டாரத்தில் உள்ள, காப்பீடு செய்த அனைத்து விவசாயிகளுக்கும் அவரவர் காப்பீடு செய்த தொகைக்கு ஏற்ப நஷ்ட ஈடு வழங்கப்படும்.

பயிர் கடன் பெறாத விவசாயிகள் முன்மொழிவுப் படிவத்துடன் கணினி சிட்டா அல்லது அடங்கல், கிராம நிர்வாக அலுவலரிடம் இருந்து சான்றிதழ் பெற்று தாம் சேமிப்புக் கணக்கு வைத்திருக்கும் வங்கியில் பிரிமியத்தை குறிப்பிட்ட தேதிக்கு முன் செலுத்த வேண்டும். முன்மொழிவுப் படிவங்களை வேளாண் துறையினரிடமும் கூட்டுறவை வர்த்தக வங்கிகளிலும் பெறலாம். மேலும் விவரங்களுக்கு 044-42051349, 42051350 ஆகிய தொலைபேசி எண்ககளுக்கும் 99403 26750, 93809 31331 ஆகிய செல்பேசி எண்களுக்கும் தொடர்புகொள்ளலாம்."

**மரவள்ளிக்கு தனி வாரியம் அமைக்க அரசுக்கு பரிந்துரை**

First Published : 09 Jan 2010 01:18:28 AM IST

Last Updated : 09 Jan 2010 09:21:06 AM IST

சேலம், ஜன.8: மரவள்ளிக்கு தனி வாரியம் அமைக்க அரசுக்கு பரிந்துரைக்கப்படும் என்று விவசாயிகள் மற்றும் ஆலை உரிமையாளர்கள், அரசு அலுவலர்கள் இடையே வெள்ளிக்கிழமை நடைபெற்ற முத்தரப்புக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் சந்திரகுமார் உறுதியளித்தார்.

சேலம் மாவட்ட மரவள்ளி உற்பத்தியாளர்கள், சேகோ ஆலை உரிமையாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் இடையிலான முத்தரப்புக் கூட்டம் (படம்) கடந்த சில ஆண்டுகளுக்குப் பிறகு சேலத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

ஆட்சியர் சந்திரகுமார் தலைமை வகித்தார். கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப் பதிவாளர் ரவிச்சந்திரன், வேளாண் இணை இயக்குநர் கருணாநிதி உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

மரவள்ளி விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் கே.ஏ.கோவிந்தசாமி, ஐக்கிய விவசாயிகள் சங்கத் தலைவர் வையாபுரி, எஸ்.கோவிந்தராஜ், சுந்தரம் ஆகியோர் பேசியது:

மாவுச் சத்தை அளவிடுவதில் வித்தியாசம்

மஞ்சள், பருத்தி போன்ற விவசாயப் பொருள்களுக்கு விற்பனை மையம் இருப்பது போல் சேலம் மாவட்டத்தில் தம்மம்பட்டி, சென்னிமலை, கருமந்துறை, சேலம் ஆகிய இடங்களில் மரவள்ளி விற்பனை மையங்கள் ஏற்படுத்த வேண்டும். விவசாயிகளிடம் இருந்து விளைபொருளை இந்த மையத்தில் இருந்தே ஆலை உரிமையாளர்கள் வாங்கிக் கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும்.

மரவள்ளியில் ஸ்டார்ச் அளவை மதிப்பிடும் கருவியை ஆலை உரிமையாளர்கள் வைத்துள்ளனர். ஆனால் இவர்களிடம் அளவீடு செய்வதற்கும், வெளியிடங்களில் அளவீடு செய்வதற்கும் நிறைய வித்தியாசம் உள்ளது. இதனால் விவசாயிகளுக்கு இழப்பு ஏற்படுகிறது. எனவே இருதரப்பினருக்கும் பொதுவான ஸ்டார்ச் அளவீடு செய்யும் மையத்தை அமைக்க வேண்டும். மரவள்ளியை ஏற்றி, இறக்குவதற்காக விவசாயிகளிடம் ஒரு லோடுக்கு ரூ.200 வீதம் வசூலிப்பதை நிறுத்த வேண்டும்.

இடைத்தரகர்களால் அதிகளவில் விவசாயிகளுக்கு இழப்பு ஏற்படுகிறது. எனவே விவசாயிகளிடம் ஆலை உரிமையாளர்களே ஆள்களை அனுப்பி நேரடியாக கொள்முதல் செய்து கொள்ள வேண்டும். கொள்முதல் செய்யும் மரவள்ளிக்கு உரிய ரசீது வழங்கப்பட வேண்டும்.

முத்தரப்புக் கூட்டம் தொடர்ந்து சீராக நடைபெற அதற்கு சட்ட அங்கீகாரம் வழங்க வேண்டும். கரும்புக்கு முத்தரப்புக் கூட்டம் நடத்தி விலை நிர்ணயம் செய்வதுபோல் மரவள்ளிக்கும் விலை நிர்ணயம் செய்ய வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் சீசன் தொடங்கும் முன்னரே கூட்டம் நடத்தப்பட வேண்டும்.

மாவுப் பூச்சி தாக்குதலால் மகசூல் பாதிக்கப்பட்டுள்ளது. இதைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். எடையில், மண் இருப்பதாகக் கூறி லோடுக்கு 50 கிலோ தள்ளுபடி செய்வது தவிர்க்கப்பட வேண்டும் என்றனர்.

தொடர்ந்து சேகோ-ஸ்டார்ச் ஆலை உரிமையாளர்கள் சங்கத் தலைவர் எஸ்.துரைசாமி, ஆலை உரிமையாளர்கள் சுந்தரம், கணேசன் ஆகியோர் பேசியது:

மூடப்படும் ஆலைகள்

இடைத்தரகர்கள் இல்லாமல் கொள்முதல் செய்வதற்கும், ரசீது வழங்குவதற்கும் நாங்கள் ஒப்புக்கொள்கிறோம்.

விவசாயிகளால்தான் இடைத்தரகர்கள் உருவானார்கள். நாங்கள் உற்பத்தி செய்யும் ஜவ்வரிசியை அரசே மொத்தமாக கொள்முதல் செய்ய வேண்டும்.

உற்பத்தியை அதிகரிக்க வேளாண்மைத்துறை உதவி செய்ய வேண்டும்.

வரத்து குறைவாக இருப்பதால் பல ஆலைகள் மூடப்பட்டுவிட்டன. சேலம் மாவட்டத்தில் ஆயிரத்துக்கும் அதிகமான கிழங்கு மில்கள் இருந்தன. ஆனால் இப்போது வெறும் 335 மட்டுமே செயல்பட்டு வருகின்றன.

ஆலைக் கழிவால் நிலத்தடி நீர் பாதிக்கப்படுவதாகவும், மண் வளம் குன்றுவதாகவும் புகார்கள் எழுகின்றன. இதைத் தடுக்க சேகோ ஆலைக் கழிவில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டத்தை அரசு ஊக்கப்படுத்த வேண்டும்.

இதற்காக 50 சதவீதம் மானியம் வழங்க வேண்டும் என்றனர்.

இதற்குப் பதிலளித்து ஆட்சியர் சந்திரகுமார் பேசியது:

ரசீது வழங்கப்படும்

மரவள்ளியில் மாவுச் சத்தை அளவிடுவதில் உள்ள பிரச்னையைத் தீர்ப்பதற்கு ஏற்கெனவே மத்தியஸ்த நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. ஆனால் இதை யாரும் பயன்படுத்துவதில்லை. இதேபோல் எடை நிலையங்களும் உள்ளன. விவசாயிகள் மரவள்ளியை நேரடியாக ஆலைக்கு அளித்தால்தான் அதற்கு ரசீது வழங்கப்படும்.

ஆனால் பெரும்பாலானோர் இடைத்தரகர்கள் மூலமே வழங்குகின்றனர். மேலும் இதனால் வருவாய் இழப்பு ஏற்படுகிறது.

இனி விவசாயிகள் ஆலை உரிமையாளர்களிடமே நேரிடையாக தங்களது விளை பொருள்களை வழங்கலாம்.

ஆலை உரிமையாளர்களின் ஆள்களே நேரிடையாக தோட்டத்துக்கு வந்து அறுவடை செய்து கொள்வார்கள். அதேபோன்று அந்ததந்தப் பகுதிகளில் உள்ள கூட்டுறவு சங்கங்களும் இனி மரவள்ளியை கொள்முதல் செய்யும். இதன் மூலம் இடைத்தரகர் பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்.

மரவள்ளி வாரியம்

மரவள்ளி விவசாயிகளுக்காக கூட்டுறவு சங்கங்கள் மூலம் இதுவரை ரூ.35.25 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

ஆலை உரிமையாளர்கள் தாங்களே மின்சாரம் தயாரித்துக் கொள்ளும் யூனிட் அமைப்பதற்காக மானியம் வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

மேலும் காபி, டீ, தேங்காய் வாரியங்கள் இருப்பது போல மரவள்ளிக்கும் தனி வாரியம் அமைக்க வேளாண்மைத் துறை அமைச்சரிடம் பேசி ஏற்பாடு செய்யப்படும்.

மாவுப்பூச்சியை கட்டுப்படுத்த 500 ஹெக்டேர் அளவுக்கு பூச்சிக்கொல்லி மருந்து தெளிக்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

**தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தில் மீன் வளர்க்க 50 சதவீதம் மானியம்**

First Published : 09 Jan 2010 12:41:01 AM IST

Last Updated :

விழுப்புரம், ஜன.8:   தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தில் கீழ் 50 சதவீத மானியத்தில் மீன் குஞ்சுகள் வளர்த்தெடுத்தல் பண்ணை அமைப்பதற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது என்று மாவட்ட ஆட்சியர் ஆர்.பழனிச்சாமி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

இத்திட்டத்தில் விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த உள்நாட்டு மீன்வளர்ப்பில் ஆர்வமுள்ளவர்கள், 5 லட்சம் விரலிக்கு மேல்வளர்ந்த மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படும் ஒரு ஹெக்டர் பரப்பளவில் பண்ணை அமைப்பதற்கு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் ஜனவரி 16-ம் தேதி மாலை 5 மணிக்குள் சேர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்பங்கள் மீன்துறை உதவி இயக்குநர், உள்நாட்டு மீன்வளம், எண்.1, விஸ்வலிங்க ஆச்சாரியர் தெரு, விழுப்புரம் என்ற முகவரிக்கு வரவேற்கப்படுகிறது என்று செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மார்ச் 11 முதல் வாங்குவோர்}விற்போர் கண்காட்சி**

First Published : 09 Jan 2010 06:25:35 AM IST
Last Updated :

மதுரை, ஜன. 8: மதுரை தமுக்கம் மைதானத்தில் மார்ச் 11}ம் தேதி முதல் 13}ம் தேதி வரை  நாள்கள் வாங்குவோர்} விற்போர் கண்காட்சி நடைபெற உள்ளது.

இது தொடர்பாக மடீட்சியா தலைவர் என்.சோமசுந்தரம் செய்தியாளர்களிடம் வெள்ளிக்கிழமை தெரிவித்ததாவது:

மதுரையில் வாங்குவோர் விற்போர் கண்காட்சி வரும் மார்ச் 11}ம் தேதி முதல் 13}ம் தேதி வரை நடைபெற உள்ளது. ஏற்கெனவே 2004 மற்றும் 2008}ம் ஆண்டுகளில் இதுபோன்று கண்காட்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு மடீட்சியாவும், தேசிய சிறுதொழில் கழகமும் இணைந்து இந்தக் கண்காட்சியை நடத்துகிறது. தென்மாவட்டங்களில் உள்ள தொழில் முனைவோர் தங்கள் தயாரிப்புகளை சந்தைப்படுத்துவதற்கு சென்னை சென்று தொழிலதிபர்களை சந்தித்து வாய்ப்புத் தேட வேண்டியுள்ளது.

இந்நிலையை மாற்றி பெரிய தொழில் நிறுவனங்கள் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களை ஓர் இடத்தில் சந்தித்து தங்களது பொருள்களை சந்தைப்படுத்தவும், சேவை அளிப்பதையும் நோக்கமாகக் கொண்டு வாங்குவோர் விற்போர் கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கண்காட்சியில் வாங்குவோர் சார்பில் 50 ஸ்டால்களும், விற்பவர்கள் சார்பில் 100 ஸ்டால்களும் அமைக்கப்படும். இதன் மூலம் ரூ.200 கோடிக்கு வர்த்தக ஒப்பந்தங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. பல்வேறு அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் இதில் பங்கேற்க உள்ளன என்று அவர் கூனார்.

இந்தக் கண்காட்சியில் பொருள்கள் வாங்குவது மற்றும் கொள்முதல் செய்வது தொடர்பான விதிமுறைகள் பற்ய கருத்தரங்கும் நடைபெற உள்ளது.

இந்தக் கண்காட்சியையொட்டி வெளியிடப்பட்ட கையேட்டின் முதல் பிரதியை பென்னர் கன்வேயர் பெல்டிங் நிறுவனத் துணைத் தலைவர் டி.ஜி.மோகன்ராம் வெளியிட, அதை பெரீஸ் ஃபுட்ஸ் இயக்குநர் பி.மகேந்திரவேல் பெற்றுக்கொண்டார். 2}வது பிரதியை தேசிய சிறுதொழில் கழகத்தின் கோட்டப் பொது மேலாளர் டி.மோகன்ராஜ் வெளியிட மகளிர் தொழில் முனைவரான ஏ.சாந்தி பெற்றுக்கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில் மடீட்சியா கௌரவச் செயலர் வி.எஸ்.மணிமாறன், இணைச் செயலர் பாலகிருஷ்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்

**பவானிசாகர் நீர்மட்டம் 89.07அடி**

First Published : 09 Jan 2010 01:16:36 AM IST

Last Updated :

ஈரோடு, டிச.8. பவானிசாகர் அணை நீர்மட்டம் வெள்ளிக்கிழமை 89.07அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 1030 கன அடி வீதம் தண்ணீர் வந்தது. பாசனத்துக்கு வாய்க்காலில் விநாடிக்கு 2000 கன அடியும், ஆற்றில் விநாடிக்கு 1000 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அணையி0ன் நீர் இருப்பு 20 டிஎம்சி.

370 நேரடி கொள்முதல் நிலையங்கள் திறப்பு

First Published : 09 Jan 2010 04:11:56 AM IST

Last Updated :

திருவாரூர், ஜன. 8: திருவாரூர் மாவட்டத்தில் நிகழ் சம்பா, தாளடி பருவத்தில் அறுவடை செய்யப்படும் நெல்லை கொள்முதல் செய்ய தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் 370 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன என்றார் மாவட்ட ஆட்சியர் எம். சந்திரசேகரன்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை செய்தியாளர்களுக்கு அவர் அளித்த பேட்டி: திருவாரூர் மாவட்டத்தில் நிகழ் சம்பா, தாளடி பருவத்தில் 1,45,940 ஹெக்டேரில் நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுவரை 1,560 ஹெக்டேரில் அறுவடைப் பணிகள் முடிவடைந்துள்ளன. இதுவரை 14,184 டன் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

நிகழாண்டில் 5.69 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டை விட 57,000 டன் கூடுதலாகும். இம்மாதம் முதல் மார்ச் மாதம் வரை அறுவடை பணிகள் அதிகமாக இருக்கும் என்பதால் மாவட்டம் முழுவதும் 370 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, தேவையான அளவுக்கு சாக்கு, பணம் மற்றும் மின்னணு தராசு, தூற்றும் இயந்திரம் உள்ளிட்ட வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

கொள்முதல் செய்யப்படும் நெல்லை அரைவைக்கு அளித்ததுபோக, நுகர்பொருள் வாணிபக் கழகத்துக்குச் சொந்தமான 4 கிடங்குகளிலும், தாற்காலிகமாக அமைக்கப்படும் 13 திறந்தவெளிக் கிடங்குகளிலும் சேமித்து வைத்து, வெளி மாவட்டங்களுக்கு அனுப்பப்படும்.

கொள்முதலில் ஈரப்பத அளவு தற்போது 17 சதவீதமாக உள்ளது. இதை கூடுதலாக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதுகுறித்து அரசுக்கு மாவட்ட நிர்வாகம் சார்பில் கடிதம் அனுப்பட்டுள்ளது.

நிகழாண்டில் தமிழக அரசு நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ.50 ஊக்கத் தொகை அறிவித்துள்ளது. இதுகுறித்த அரசாணை கிடைக்கப்பெற்றவுடன், புதிய விலையில் நெல் கொள்முதல் நடைபெறும் என்றார் ஆட்சியர்.

பேட்டியின் போது மாவட்ட வருவாய் அலுவலர் அ. ஜான்லூயிஸ், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக முதுநிலை மண்டல மேலாளர் ஜெ. ராபின்சன் ஆகியோர் உடனிருந்தனர்.

**கடலூரில் நெல் அறுவடை இயந்திரங்களுக்கு டீசல் பற்றாக்குறை**

First Published : 09 Jan 2010 01:20:14 AM IST

Last Updated :

கடலூர், ஜன. 8: கடலூர் மாவட்டத்தில் நெல் அறுவடை இயந்திரங்களுக்கு டீசல் தட்டுப்பாடு ஏற்பட்டு உள்ளது.

கடலூர் மாவட்டத்தில் காவிரி டெல்டா பாசனப் பகுதிகள் உள்பட 2.5 லட்சம் ஏக்கரில் சம்பா நெல் பயிரிடப்பட்டு உள்ளது. தற்போது ஆழ்குழாய் கிணற்று பாசனப் பகுதிகள், டெல்டா பகுதிகளில் வடவாறு மற்றும் வடக்கு ராஜன் வாய்க்கால் பாசனப் பகுதிகளில் நெல் அறுவடை தொடங்கி விட்டது.

தேசிய கிராமப்புற வேலை உறுதித் திட்டம் காரணமாக கடலூர் மாவட்டத்தில் நெல் அறுவடைக்கு தொடர்ந்து ஆள் பற்றாக்குறை நீடித்து வருகிறது. எனவே பெரும்பாலான நிலங்களில் இயந்திரங்கள் மூலமாகவே அறுவடை நடக்கிறது.

ஆனால் கடலூர் மாவட்டத்தின் மொத்தத் தேவையில் 10 சதவீதம் அறுவடை இயந்திரங்கள் கூட இங்கு இல்லை. நெல் அறுவடை இயந்திரத்தின் விலை ரூ.25 லட்சத்துக்கு மேல் இருப்பதால், கடலூர் மாவட்ட விவசாயிகளால் அதை வாங்க முடியவில்லை என்று தெரிவிக்கிறார்கள்.

கடலூர் மாவட்டத்துக்குத் தேவையான 100-க்கும் மேற்பட்ட நெல் அறுவடை இயந்திரங்கள் கள்ளக்குறிச்சி, ஆத்தூர், சேலம் பகுதிகளில் இருந்தே வரவழைக்கப்படுகின்றன.

அறுவடை இயந்திரத்துக்கு நாளொன்றுக்கு 500 லிட்டருக்கு மேல் டீசல் தேவைப்படும். தற்போது அறுவடை நடந்து வரும் பகுதிகளில் சேத்தியாத்தோப்பு, குமாரக்குடி, காட்டுமன்னார்கோவில் ஆகிய இடங்களில் மட்டுமே பெட்ரோல் நிலையங்கள் உள்ளன.

திடீரென பல அறுவடை இயந்திரங்கள் வந்ததால், அவற்றுக்குத் தேவையான டீசலை இப்பகுதியில் உள்ள பெட்ரோல் நிலையங்களால் வழங்க முடிவில்லை என்று தெரியவந்துள்ளது. இதனால் நெல் அறுவடை இயந்திரங்களுக்கு டீசல் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து மாட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண் பணிகள்) மணியிடம் கேட்டபோது, இதுகுறித்து மாவட்ட வழங்கல் அலுவலர் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

இதுபற்றி பாசிமுத்தான் ஓடை விவசாயிகள் சங்கத் தலைவர் ரவீந்திரன் கூறுகையில், கடலூர் மாவட்டத்தில் வேளாண் பொறியியல் துறையில் 3 அறுவடை இயந்திரங்கள் மட்டுமே உள்ளன. அவைகளும் தற்போது விழுப்புரம் மாவட்டத்தில் நெல் அறுவடைப் பணிகளில் ஈடுபட்டு உள்ளன. அறுவடைப் பணிகள் மற்றும் வேளாண் பணிகளுக்கு கூடுதலான இயந்திரங்களை, வேளாண் பொறியியல் துறை வாங்கி, விவசாயிகளுக்கு வாடகைக்கு விட வேண்டும்.

டயர் மாடல் அறுவடை இயந்திரத்துக்கு கடந்த ஆண்டு ஏக்கருக்கு ரூ.1,000 ஆக இருந்த வாடகை, இந்த ஆண்டு ரூ.1,300 ஆகவும், பெல்ட் மாடல் அறுவடை இயந்திரத்துக்கு வாடகை ரூ.1,200 ஆக இருந்தது ரூ.1,800 ஆகவும் அதிகரித்து விட்டது. எனவே வேளாண் பொறியியல் துறை இத்தகைய இயந்திரங்களை வாங்கி வைத்து இருந்தால், விவசாயிகள் அறுவடை போன்ற வேளாண் பணிகளை குறைந்த செலவில் மேற்கொள்ள முடியும் என்றார்.

**நெல் கொள்முதல் விலை உயர்வு: வியசாயிகள் மகிழ்ச்சி**

First Published : 09 Jan 2010 01:19:53 AM IST

Last Updated :

கடலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் 114 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க உத்தரவிட்டப்பட்டு உள்ளது. இதில் பொங்கலுக்குள் 60 நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு விடும் என்றும், ஏனைய கொள்முதல் நிலையங்கள் 20-ம் தேதிக்குள் திறக்கப்படும் என்றும் நுகர்பொருள் வாணிபக் கழக அதிகாரிகள் தெரிவித்தனர்.

தமிழக அரசு சன்னரக நெல்லுக்கு குவிண்டால் ரூ.1,050 (மத்திய அரசு விலை ரூ. 930) என்றும், மிகச் சன்ன ரகம் குவிண்டாலுக்கு ரூ.1100 (மத்திய அரசு விலை ரூ. 980) அறிவித்து உள்ளது. நெல்லுக்கு விலை உயர்த்தப்பட்டு இருப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர். இதனால் அறுவடை ஆகும் அனைத்து நெல்லும் அரசு கொள்முதல் நிலையங்களுக்கே விற்பனைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**தேசிய வேளாண் பயிர் பாதுகாப்புத் திட்டத்தில் சேர வேண்டுகோள்**

First Published : 09 Jan 2010 06:04:17 AM IST

Last Updated :

சிவகங்கை,ஜன.8: மத்திய, மாநில அரசின் தேசிய வேளாண்மைப் பயிர் பாதுகாப்பு த் திட்டத்தில் சேருமாறு விவசாயிகளுக்கு மண்டல மேலாளர் அன்பரசு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில், தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தின் கீழ் அனைத்து வகையான உணவுப் பயிர்கள் காப்பீடு செய்யப்படுகின்றன. இயற்கை சீற்றங்களால் ஏற்படும் மகசூல் இழப்புகளுக்கு இத்திட்டம் காப்பீடு வழங்குகிறது.

குத்தகைக்காரர்கள், வங்கி கடன் பெற்றோர் மற்றும் பெறாதோர் போன்ற அனைத்து விவசாயிகளும் இத்திட்டத்தில் சேர்ந்து பயன்பெறலாம்.

இத்திட்டம் மத்திய, மாநில அரசின் பரிந்துரைப்படி அக்ரிகல்சர் இன்சூரன்ஸ் கம்பெனி ஆப் இந்தியா லிட் மூலம் தமிழ்நாட்டில் அமல்படுத்தி வருகிறது.

இதுவரை இத்திட்டம் மூலமாக தமிழக விவசாயிகளிடமிருந்து ரூ.116 கோடி பிரிமியத்தொகை பெறப்பட்டு ரூ.1171 கோடி நஷ்டஈடாக வழங்கி உள்ளது. இதன் மூலம் சுமார் 8 லட்சம் விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர்.

பயிர்க் கடன் பெற்ற விவசாயிகள் கட்டாயமாக பயிர்க்கடன் வாங்கும் மதிப்புக்கு வங்கிகளே பிரீமியத்தை வசூல் செய்கிறது. இத்திட்டத்தில் சேரவேண்டிய கடைசி நாள் கடன் பெறும் விவசாயிகளுக்கு 31-3-2010.

கடன் பெறா விவசாயிகளுக்கு 15-3-2010. இதில் விவசாயிகளுக்கு அவரவர் காப்பீடு செய்த தொகைக்கு ஏற்ப நஷ்ட ஈடு வழங்கப்படுகிறது. முன் மொழிவு படிவங்களை விவசாயத் துறையிடமும், கூட்டுறவு வர்த்தக வங்கியிலும் கேட்டுப் பெறலாம். தகவல்களுக்கு மண்டல மேலாளர், அக்ரிகல்சர் இன்சூரன்ஸ் ஆப் இந்தியா லிட், சென்னை. போன் 044-42051350 செல்போன்-9940326750, 9380931331.

**நெல்லையில் கால்நடை மருத்துவக் கல்லூரி**
First Published : 09 Jan 2010 01:22:37 AM IST
Last Updated : 09 Jan 2010 09:20:59 AM IST

நாமக்கல், ஜன.8: தமிழகத்தின் 3-வது கால்நடை மருத்துவக் கல்லூரி திருநெல்வேலியில் விரைவில் அமைக்கப்படும் என, மத்திய சுகாதாரத்துறை மற்றும் குடும்ப நலத்துறை இணையமைச்சர் செ. காந்திச் செல்வன் தெரிவித்தார்.

நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் வெள்ளி விழாவை முன்னிட்டு பன்னாட்டு கோழியின கண்காட்சி வெள்ளிக்கிழமை துவங்கியது. கண்காட்சியை துவக்கி வைத்து மத்திய சுகாதாரத்துறை இணையமைச்சர் செ. காந்திச் செல்வன் பேசியது:

நாமக்கல் மாவட்டம் என்றாலே லாரி, கோழி, கல்வி இந்த மூன்றும் தான் நினைவுக்கு வரும். கடும் உழைப்பின் காரணமாக எல்லோரையும் திரும்பிப் பார்க்கும் வகையில் நாமக்கல் கோழிப் பண்ணைகள் இமாலய வளர்ச்சியைப் பெற்றுள்ளன. கறிக்கோழி உற்பத்தியில் 5-வது இடத்தையும், முட்டை உற்பத்தியில் 2-வது இடத்தையும் பெற்றுள்ளது நாமக்கல் மாவட்டம். தமிழக மக்களிடையே இறைச்சி, முட்டையின் நுகர்வு ஆண்டு சராசரிக்கும் குறைவாகவே உள்ளது. உலக சுகாதார நிறுவனத்தின் வழிகாட்டுதல்படி தனிபர் ஒருவர் ஆண்டுக்கு 180 முட்டைகள் உட்கொள்ள வேண்டும். இதை உணர்ந்துதான் முதல்வர் கருணாநிதி, சத்துணவில் வாரத்துக்கு 3 முட்டை வழங்க உத்தரவிட்டார்.

ஒரு குழந்தை ஆண்டுக்கு 150 முட்டைகளை சாப்பிடும் நிலையுள்ளது. தமிழக கோழிப் பண்ணையாளர்களோ வாரத்துக்கு 5 முட்டை வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்து வருகின்றனர். மக்கள் நலத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வரும் முதல்வர், பண்ணையாளர்களின் கோரிக்கையையும் பரிசீலனை செய்து நல்ல தீர்வை அறிவிப்பார். தமிழகத்தில் மட்டுமல்லாது இந்தியா முழுவதும் மதிய உணவுத் திட்டத்தில் முட்டை வழங்க இத் தொழிலில் ஈடுபட்டுள்ளோர் முன்வர வேண்டும். வெளிநாடுகளிலோ, பிற மாநிலங்களிலோ பறவைக் காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்டால் தமிழக கோழிப் பண்ணைகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. எனவே, கோழிப் பண்ணைகளை தனித்தனி மண்டலங்களாகப் பிரிக்க முடிவு செய்து பண்ணைகளை பதிவு செய்யுமாறு அரசு தெரிவித்துள்ளது.

பதிவு தொடர்பாக காலதாமதம் ஏற்படுகிறது. இதை விரைந்து முடித்தால் மத்திய அரசு மூலம் கோழிப் பண்ணைகளை தனி மண்டலமாகப் பிரித்து அறிவிக்கப்படும் என்றார் அவர்.

**நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரியில் பறவைக் காய்ச்சல் பரிசோதனைக் கூடம்**
First Published : 09 Jan 2010 01:23:34 AM IST
Last Updated : 09 Jan 2010 09:20:41 AM IST

நாமக்கல், ஜன. 8: நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரியில், பறவைக் காய்ச்சல் பரிசோதனைக் கூடம் துவங்கப்படும் என, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழக துணைவேந்தர் ப. தங்கராஜு தெரிவித்தார்.

நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரியில் வெள்ளிக்கிழமை நடந்த பன்னாட்டு கோழியின கண்காட்சி துவக்க விழாவில் அவர் பேசியது:

உலகளவில் வளர்ந்து வரும் நாடுகளில் இந்தியா 2-வது இடத்தைப் பிடித்துள்ளது. இதில், கோழிப் பண்ணைத் தொழில் வளர்ச்சி நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய இடம் பெற்றுள்ளது. இறைச்சி, முட்டை உற்பத்தியில் சர்வதேச அளவில் இந்திய கோழிப் பண்ணைத் தொழிலே பிரதானமாக உள்ளது. தற்போதைய சூழலில் கோழிப் பண்ணையில் இருந்து உற்பத்தி செய்யப்படும் பொருட்களை மதிப்புக் கூட்டிய பொருட்களாக மாற்றம் செய்தால் மட்டுமே சர்வதேச சந்தையில் நிலைத்து நிற்க முடியும்.

மேலும், உலகளாவியை வளர்சசி பெற முடியும். குறிப்பாக கோழி இறைச்சியை பதப்படுத்தி தரமான இறைச்சியாக ஏற்றுமதி செய்யலாம். இதேபோல், கால்நடைச் செல்வம் மிகுந்துள்ள இந்தியாவில் இருந்து ஆட்டிறைச்சியையும் மதிப்புக் கூட்டிய பொருட்களாக மாற்றம் செய்து ஏற்றுமதி செய்யலாம்.

கோழிப் பண்ணையாளர்களுக்கு உதவ நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மூலம் ஏற்கெனவே தீவன பகுப்பாய்வுக் கூடம், கோழியின ஆய்வுக் கூடம் இயங்கி வருகின்றன. தீவன பகுப்பாய்வுக் கூடத்தில் கட்டண அடிப்படையில் தீவனத்தைப் பரிசோதனை செய்து பரிந்துரைகள் வழங்கப்படுகின்றன. கோழியின நோய்கள் குறித்தும் பரிசோதனை செய்து தகவல் தெரிவிக்கப்படுகிறது. பறவைக் காய்ச்சல் குறித்தும் பரிசோதனை செய்து தகவல் தெரிவிக்கும் வகையிலான ஆய்வுக் கூடமும் துவங்கப்படும். நவீன தொழில்நுட்பங்களை ஏற்று அதற்கேற்ப பண்ணைத் தொழிலை மாற்றிக் கொள்ள வேண்டியது அவசியம்.

சுற்றுச்சூழல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் வகையிலான பண்ணைகளை அதிகப்படுத்த வேண்டும். உயர்தர புரதம், தீவன மூலப் பொருட்களைப் பயன்படுத்த வேண்டும். மரபணு மாற்ற கோழிகளைப் பயன்படுத்துவதன் மூலம் அதிக எண்ணிக்கையில் முட்டைகளை உற்பத்தி செய்யலாம்.

மரபியல் மாற்றம் என்பது கோழிப் பண்ணைத் தொழிலுக்கு கிடைத்த வரப்பிரசாதம். இந்திய கோழிப் பண்ணைத் தொழிலுக்கான சந்தை, சர்வதேச அளவில் 2-வது பெரியது. ஆண்டுதோறும் 12 முதல் 15 சதம் வளர்ச்சியைப் பெற்று வருகிறது. 2012-ல் இந்திய கோழிப் பண்ணைத் தொழில் மதிப்பு ரூ.60 ஆயிரம் கோடியாக உயரும் என்றார் அவர்.

**பன்னாட்டு கோழியின கண்காட்சி**

First Published : 09 Jan 2010 01:13:40 AM IST
Last Updated :

நாமக்கல், ஜன.8: நாமக்கல்லில் பன்னாட்டு கோழியின கண்காட்சி வெள்ளிக்கிழமை துவங்கியது.

நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி வெள்ளி விழாவை முன்னிட்டு ஜன. 8, 9, 10 ஆகிய மூன்று நாட்கள் கல்லூரி வளாகத்தில் கண்காட்சி மற்றும் கருத்தரங்கு நடைபெறுகிறது.

மத்திய சுகாதாரத்துறை இணையமைச்சர் செ.காந்திச் செல்வன், கண்காட்சியை துவக்கி வைத்தார்.

ஆட்சியர் சகாயம், கருத்தரங்க மலரை வெளியிட்டார். தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக துணைவேந்தர் ப. தங்கராஜு, கல்லூரி முதல்வர் சி. சந்திரஹாசன் உள்ளிட்டோர் பேசினர்.

இக் கண்காட்சியில், அழகுக்காக வளர்க்கப்படும் பல்வேறு நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட கோழிகள் இடம்பெற்றுள்ளன. ரூ. 25 ஆயிரம் மதிப்பிலான ரெட் கோல்டன் பீன்ஸ் எனப்படும் மயில்போன்ற தோற்றமுடைய கோழி, அனைவரது கவனத்தையும் ஈர்த்தது.

இவை தவிர ஈமு கோழி, வான்கோழி, சண்டைச் சேவல், பெருஞ்சாதி கோழி, ஒயிட் சில்க் கோழி, நாட்டுக் கோழிகள் என பல்வேறு ரக கோழிகள் கண்காட்சியில் இடம் பெற்றுள்ளன.

கோழிப் பண்ணைகளுக்கான அனைத்து நவீன உபகரணங்கள், மூலப் பொருட்கள், கோழியின வகைகளும் கண்காட்சியில் இடம் பெற்றுள்ளன. 50-க்கும் மேற்பட்ட அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. கண்காட்சியுடன் காடை வளர்ப்பு, பண்ணைகளில் ஈக்களை கட்டுப்படுத்துதல், இறந்த கோழிகளை பயனுள்ளதாக மாற்றும் முறைகள், கோழிக் கழிவிலிருந்து மின்சாரம் தயாரிப்பு, கறிக்கோழி வளர்ப்பு, ஈமு கோழி வளர்ப்பு குறித்தும் கருத்தரங்கில் விளக்கமளிக்கப்படுகிறது.

தினமலர்

'பி.டி., கத்தரிக்காய்க்கு அனுமதி இல்லை'

ஜனவரி 09,2010,00:00 IST



சென்னை : "பி.டி., கத்தரிக்காய் தொடர்பாக வேளாண்மைப் பல்கலை நடத்திய ஆய்வுகளில், பக்கவிளைவுகள் ஏதும் இல்லையெனத் தெரியவந்துள்ளது' என அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் தெரிவித்தார்.

சட்டசபையில் கேள்வி நேரத் தின் போது, எம்.எல்.ஏ.,க்கள் சிவபுண்ணியம், நன்மாறன், செங் கோட்டையன், பீட்டர் அல்போன்ஸ் ஆகியோரின் கேள்விகளுக்கு பதில் அளித்து அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் கூறியதாவது:அமெரிக்காவைச் சேர்ந்த, "மான்சாண்டோ' நிறுவனம் மரபணு மாற்றம் செய்யப்பட்ட பி.டி., பருத்தி மற்றும் கத்தரிக்காய் விதைகளை அறிமுகம் செய் துள்ளது. இந்த விதைகளைப் பயன்படுத்துவதால், விளை நிலங்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறதா என்பதை அறியும் வகையில், அந்த நிறுவனத்தோடு இணைந்து, வேளாண்மை பல்கலை ஆய்வு நடத்தியது.மரபணு மாற்ற விதையை பயன்படுத்தி, சோதனை முறையில் பயிர் செய்யப்பட்டு, ஆய்வு நடத்தப்பட்டது. மூன்றாண்டுகள் நடந்த இந்த ஆய்வின் முடிவில், இந்த விதைகளால் பக்கவிளைவுகள் ஏதும் இல்லை என தெரியவந்தது.இந்த முடிவு, மத்திய அரசின் விஞ்ஞானிகள் குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

அவர்களும், இந்த முடிவை ஏற்று உறுதி செய்துள்ளனர். இதன்பின், பி.டி. கத்திரிக்காய் உள்ளிட்ட விதைகளை அனுமதிப்பதா என்பதை மத்திய அரசு முடிவு செய்து அறிவிக்கும்.எனவே, பி.டி., கத்தரிக்காய் பயிரிட தமிழக அரசு இதுவரை அனுமதி வழங்கவில்லை. இந்த விதைகளை வாங்க வேண்டும் என, அரசு பிரசாரம் செய்யவும் இல்லை. "மான்சாண்டோ' நிறுவன விதைகளை பயன்படுத்தினால், தொடர்ந்து அவர்களிடமே, அவர்கள் சொல்லும் விலைக்கு விதைகளை வாங்க வேண்டிய நிலை விவசாயிகளுக்கு ஏற்படும்.இதற்கிடையே, மரபணு மாற்று

விதைகளை பயன்படுத்துவது தொடர்பாக, வேளாண்மைப் பல்கலைக் கழகம் தனியாக ஒரு ஆய்வை மேற்கொண்டுள்ளது. இதற்காக, பல்கலைக் கழகம் சார்பில், விதைகள் உருவாக்கப் பட்டுள்ளன.

இந்த விதைகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு, எவ்வித பக்கவிளைவும் இல்லையென உறுதி செய்யப்பட்டுள்ளது. விஞ்ஞான வளர்ச்சியை அலட்சியப்படுத்தாமல், விவசாயிகளுக்கு அது பயனுள்ளதாக இருந்தால் ஏற்றுக் கொள்ள வேண்டும். மரபணு மாற்ற விதைகளைப் பயன்படுத்தவதால் பாதிப்பு என புகார் எதுவும் வரவில்லை. இவ்வாறு வீரபாண்டி தெரிவித்தார்.

**புவி வெப்பமாதல் விழிப்புணர்வு பேரணி**

ஈரோடு: புவி வெப்பமாதல் தடுப்பு விழிப்புணர்வு பேரணி ஈரோட்டில் நடந்தது. சித்தோடு ஸ்ரீ கே.ஆர்.பி. அகாடமி பள்ளி பள்ளி மாணவர்கள் பேரணியில் பங்கேற்றனர். புவி வெப்பமாவதால் ஏற்படும் தீமைகள் குறித்தும், மரம் நடுவதன் அவசியம், பிளாஸ்டிக்கால் ஏற்படும் கேடுகள் குறித்து வாசகங்கள் அடங்கிய பேனர்களை மாணவர்கள் ஏந்தி வந்தனர். ஈரோடு பன்னீர்செல்வம் பூங்காவில் இருந்து புறப்பட்ட பேரணி பிரப் சாலை வழியாக வ.உ.சி., மைதானத்தை அடைந்தது. பேரணி செல்லும் வழியெங்கும் மரக்கன்றுகள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது. பேரணியை ஈரோடு கலெக்டர் சுடலைக்கண்ணன் துவக்கி வைத்தார். பள்ளி சேர்மன் மோகன் தலைமை வகித்தார். தாளாளர் சித்ரா மோகன் வரவேற்றார். பள்ளி தலைவர் ராஜேஸ், முதல்வர் மீனாட்சி ஆகியோர் பங்கேற்றனர்.

**அரசு நெல் கொள்முதல் நிலையம் திறக்க விவசாயிகள் வலியுறுத்தல்**

ஈரோடு: நெல் கொள்முதல் நிலையங்களை உடனே திறக்கவில்லை என்றால், பொங்கலன்று ஆர்ப்பாட்டம் நடக்கும் என தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கூறியுள்ளது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில துணைத் தலைவர் துளசிமணி கூறியதாவது: ஈரோடு மாவட்டத்தில் கீழ்பவானி பாசனப் பகுதியில் நன்செய் பாசனம் மூலம் ஒரு லட்சத்து 7,000 ஏக்கர் நிலங்களில் டிசம்பர் மாதம் கடைசி வாரத்திலேயே நெல் அறுவடை துவங்கி விட்டது. தற்போது தீவிரமாக நெல் அறுவடை நடந்து வருகிறது. எனவே, நெல் கொள்முதல் நிலையங்களை அரசு உடனே துவங்க வேண்டும். தமிழக அரசு குவிண்டாலுக்கு 1,050 ரூபாய் விலை நிர்ணயத்துடன் ஊக்கத்தொகையாக 50 ரூபாய் சேர்த்து 1,100 ரூபாய் விலை அறிவித்துள்ளது. இத்தொகை விவசாயிகளுக்கு கட்டுப்படியானதாக இல்லை. எனவே, குவிண்டாலுக்கு 1,500 ரூபாய் விலை நிர்ணயம் செய்து அரசு ஆணை வெளியிட வேண்டும். தற்போது நெல் அறுவடை தீவிரமடைந்துள்ளதால், வியாபாரிகள் திட்டமிட்டு வெளி மார்க்கெட்டில் நெல் விலையை குறைத்து, மிகக்குறைந்த விலைக்கு வாங்குகின்றனர். இதனால், ஏற்கனவே சாகுபடி செலவால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் பெருத்த நஷ்டத்தையும், துயரத்தையும் அடைந்துள்ளனர்.

தமிழக அரசு உடனடியாக பவானிசாகர் அணை பாசனப் பகுதியில் காஞ்சிகோவில், கவுந்தப்பாடி, நசியனூர், நல்லாம்பட்டி, சத்தியமங்கலம், கோபி, ஈரோடு, பவானி, சிவகிரி, மொடக்குறிச்சி, எழுமாத்தூர், முத்தூர், வெள்ளோடு, வெள்ளகோவில், காசிபாளையம், வெள்ளாங்கோவில், பொலவக்காளிபாளையம் ஆகிய இடங்களில் நெல் கொள்முதல் நிலையம் துவங்க வேண்டும். நெல் கொள்முதல் நிலையங்களை திறக்காவிடில் வரும் 14ம் தேதி பொங்கல் அன்று ஈரோடு கலெக்டர் அலுவலகம் முன் தமிழ்நாடு விவசாய சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

**வாழையில் உபபொருள் தயாரிப்பு பயிற்சி முகாம்**

குளித்தலை: குளித்தலை அரு கே ஊத்தாம்பட்டியில் வாழையிலிருந்து மதிப்பூட்டப்பட்ட உபபொருள் தயாரிப்பு பயிற்சி நிறைவு நாள் விழா நடந்தது. குளித்தலை அருகே சிவாயம் பஞ்சாயத்துக்கு உட்பட்ட ஊத்தாம்பட்டியில் சினேகிதி டிரஸ்ட், கரூர் நபார்டு வங்கி இணைந்து மகளிருக்கான வாழையிலிருந்து மதிப்பூட்டப்பட்ட உபபொருள் தயாரிப்பு பயிற்சி நிறைவு விழா நடந்தது. சிவாயம் பஞ்சாயத்து தலைவர் சரவணன், மகளிர் குழு நிர்வாகி பூமாதேவி, வாயா, மதர்தெரசா தொண்டு நிறுவன பயிற்றுனர்கள் நடராஜன், பாஸ்கர் முன்னிலை வகித்தனர். சினேகிதி நிறுவன பயிற்சியாளர் மங்கையர்கரசி வரவேற்றார். நிறைவு விழாவில் நபார்டு வங்கி உதவி பொது மேலாளர் பார்த்திபன், குளித்தலை ஸ்டேட் வங்கி கிளை மேலாளர் நாகப்பன், பஞ்சப்பட்டி ஸ்டேட் வங்கி கடன் ரெக்கவரி மேலாளர் சபரி மற்றும் பலர் கலந்து கொண்டு பேசினர். 30 மகளிர் சுயஉதவிக்குழுவினர் பங்கேற்றனர். ஏற்பாடுகளை சினேகிதி டிரஸ்ட் பணியாளர்கள் வடிவேல், அரங்கப்பெருமாள் செய்திருந்தனர். பணியாளர் கோமளம் நன்றி கூறினார்.

**விவசாயிகளுக்கான ஆத்மா திட்ட பயிற்சி**

செக்கானூரணி : திருமங்கலம் வட்டார தோட்டக்கலைத்துறை சார்பில் ஆத்மா(வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை) திட்டத்தின் கீழ் விவசாயிகள், ஆர்வலர் குழுவிற்கான தொழில் திறனூட்டும் பயிற்சி செக்கானூரணியில் நடந்தது. இரண்டு நாட்கள் பயிற்சியை, ஊராட்சிமன்ற தலைவர் தனபாண்டியன் துவக்கி வைத்தார். தோட்டக்கலை உதவி இயக்குனர் ஜவஹரிபாய், தோட்டக்கலை அலுவலர் மணிவேலு, உதவி வேளாண்மை அலுவலர் சிவராஜ் ஆகியோர் விவசாயிகளுக்கு விளக்கினார். உதவி வேளாண்மை அலுவலர் அழகர்சாமி நன்றி கூறினார். இதில் தேன்கல்பட்டி மகளிர் தோட்டக்கலைக் குழுவினர் பங்கேற்றனர். இன்று (ஜன.9) காங்கேயநத்தம் தோட்டக்கலை மிளகாய் பயிர் சாகுபடி குழுவிற்கும், ஜன.11, 12ல் ஆ.கொக்குளம் விவசாயிகளுக்கும் பயிற்சியளிக்கப்படுகிறது.

நாமக்கல்லில் இருந்து 96% முட்டை ஏற்றுமதி : மத்திய அமைச்சர் பெருமிதம்

நாமக்கல்: ""இந்திய அளவில் 96 சதவீதம் முட்டை நாமக்கல்லில் இருந்து வெளிமாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது,'' என, மத்திய இணை அமைச்சர் காந்திச்செல்வன் பேசினார்.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை மற்றும் கோழியின அறிவியல் துறை, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் வெள்ளி விழாவை முன்னிட்டு, பன்னாட்டு கோழியின கண்காட்சி மற்றும் கருத்தரங்கு கல்லூரி வளாகத்தில் நடந்தது. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை துணை வேந்தர் தங்கராஜூ தலைமை வகித்தார். கல்லூரி முதல்வர் சந்திரஹாசன் வரவேற்றார். கல்லூரி நிர்வாக இயக்குனர் செல்வராஜ், கோவை சுகுணா பவுல்ட்ரி பார்ம் நிர்வாக இயக்குனர் சவுந்திரராஜன், யூனியன் சேர்மன் நவலடி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட கலெக்டர் சகாயம், கருத்தரங்கு கையேட்டை வெளியிட்டு பேசியதாவது: முட்டை உற்பத்தியில் 90 சதவீதம் ஏற்றுமதி செய்யும் மாவட்டமாக நாமக்கல் திகழ்கிறது. நம் மாவட்ட மக்கள் கடின உழைப்பாளிகள். புதிய முயற்சியை துணிச்சலுடன் மேற்கொள்பவர்கள். முட்டையும் கிடைக்கிறது. தேர்வு எழுதும் மாணவர்களை 100க்கு 100 சதவீதம் வெற்றி பெற செய்யும் மாவட்டமாக உள்ளது. இந்த தேசத்தில் லட்சக்கணக்கான கிராமங்கள், கோடிக்கணக்கான விவசாயிகளின் துயரை போக்கும் வகையில், மத்திய, மாநில அரசுகள் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறது. முதலில், 500, 1,000, 2,000 என்ற சிறிய அளவில் துவங்கிய பண்ணைகளால்

இன்று 3.40 கோடி கோழிகள் உள்ளன. விவசாயிகளின் கடின உழைப்பும், வித்தியாசமான சிந்தனை, புதிய முயற்சியை மேற்கொள்ள ஏற்பட்ட துணிவே காரணம். அதன் காரணமாக கோழிப்பண்ணையை துவங்கிய விவசாயிகள் இன்று உயர்ந்து நிற்கின்றனர். விவசாயிகள் முன்னேற வேண்டும் என்றால், உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை மதிப்பூட்டப்பட்ட பொருளாக மாற்ற வேண்டும். அப்போதுதான் வாழ்வில் உயர்வு பெறமுடியும். விவசாயிகள் கூடுதல் வருமானம் பெறவேண்டும் என்ற நோக்கில் உழவன் உணவகம் துவக்கப்பட்டது. வறுமையோடும், வெறுமையோடும் வாழக்கூடிய விவசாயிகள் துயர் துடைக்கப்படவேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

பன்னாட்டு கோழியின கண்காட்சி மற்றும் கருத்தரங்கை துவக்கி வைத்து மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை இணை அமைச்சர் காந்திச்செல்வன் பேசியதாவது: நாமக்கல்லை குறிப்பிட்டு சொல்லவேண்டுமானால் லாரி தொழிலில் இந்திய அளவில் முதன்மை மாவட்டமாகவும், அதை தொடர்ந்து இந்திய துணை கண்டத்தில் முட்டை உற்பத்தியில் இரண்டாவது இடத்தையும் பெற்றுள்ளது. மேலும், கல்வித்துறையில் மற்ற மாநிலங்களை காட்டிலும் சென்னை முதல் கன்னியாகுமாரி வரை நல்ல கல்வி அளிக்கும் மாவட்டமாக நாமக்கல் விளங்குகிறது. அதன் மூலம் நாமக்கல் மாவட்டம் மாபெரும் வளர்ச்சியை பெற்றுள்ளது என்றால், அதில் கால்நடை கல்லூரியின் பங்கும் உள்ளது.

தினமும் 2.50 கோடி முட்டை வெளிமாநிலத்துக்கு சென்றுகொண்டிருக்கிறது. ஆண்டுக்கு 221 கோடி முட்டையும், 222 கோடி முட்டை பவுடரும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்திய அளவில் 96 சதவீதம் வெளிமாநிலங்களுக்கு இங்கிருந்துதான் முட்டை ஏற்றுமதி செய்யப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இந்திய அளவில் கறிக்கோழி உற்பத்தியில் 5வது இடத்திலும், முட்டை உற்பத்தியில் இரண்டாவது இடத்திலும் நாமக்கல் மாவட்டம் உள்ளது. அரசு அறிவிக்கும் திட்டம் அனைத்தும் ஏழை, எளிய, விவசாயிகளின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்காக செயல்படுத்தப்படுகிறது. மத்திய அரசு பல்வேறு திட்டங்களுக்காக 1,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. கோழிப்பண்ணை வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சிக்காக கால்நடை கல்லூரிக்கு தேவையான நிதி கோரினால், துறை அமைச்சர் என்ற முறையில் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் பேசினார்.

விழாவை முன்னிட்டு பல்வேறு நிறுவனங்களின் தயாரிப்பு பொருட்கள் இடம் பெற்ற கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது. அதில் 50க்கும் மேற்பட்ட நிறுவனங்களின் தயாரிப்பு பொருட்கள் இடம் பெற்றிருந்தன. நிகழ்ச்சியில், தமிழ்நாடு கோழிப்பண்ணையாளர் சங்க தலைவர் நல்லதம்பி, நாமக்கல் மண்டல முட்டை உற்பத்தியாளர் சங்க தலைவர் சின்ராஜூ, லத்துவாடி பஞ்சாயத்து தலைவர் தங்கவேல் உள்பட பலர் பங்கேற்றனர்.

**நாகையில் மூன்று லட்சம் டன் நெல் கொள்முதல் செய்ய திட்டம்:டி.ஆர்.ஓ. தகவல்**

நாகை:நாகை மாவட்டத்தில் 230 நேரடி கொள்முதல் நிலையங்கள் வாயிலாக 3 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாக டி.ஆர்.ஓ. அண்ணாதுரை தெரிவித்தார். நாகை அருகே வலிவலம் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் சம்பா நெல் கொள்முதல் செய்யும் பணி தொடக்க நிகழ்ச்சி நடந்தது.

டி.ஆர்.ஓ. அண்ணாதுரை நெல் கொள்முதலைத் தொடக்கி வைத்து பேசியதாவது: நாகை மாவட்டத்தில் 3 லட்சத்து 47 ஆயிரத்து 500 ஏக்கரில் சம்பா சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது விவசாயிகள் சாகுபடி செய்துள்ள நெல் அரசு கொள்முதல் நிலையங்கள் வாயிலாக கொள்முதல் செய்யும் பணி தொடங்கப்பட்டுள்ளது.நாகை மாவட்டத்தில் 230 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் வாயிலாக 3 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் மின்தராசு மற்றும் 72 லட்சம் சாக்குக்குள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. நெல் கொள்முதல் செய்யும் பணியை கண்காணிக்க பறக்கும் படைகள்

நியமிக்கப்பட்டுள்ளது என்றார். நுகர்பொருள் வாணிப கழக முதுநிலை மண்டல மேலாளர் விஸ்வநாதன் மற்றும் அதிகாரிகள் உடன் இருந்தனர்.

**பிசுபிசுத்து போன மரவள்ளி முத்தரப்பு கூட்டம் : இடைத்தரகர்களை அடியோடு ஒழிக்க விவசாயிகள், அதிபர்களுக்கு அறிவுரை**

சேலம்: ""இடைத்தரகர்களை ஒழிக்க ஆலை அதிபர்களே நேரடியாக விவசாயிகளின் இடத்துக்கு சென்று ஆட்களை கொண்டு அறுவடை செய்து உரிய விலையை வழங்க வேண்டும். விவசாயிகள் விரும்பும்பட்சத்தில் லேம்ப் கூட்டுறவு சங்கம் மூலம் ஆலைகளுக்கு விற்பனை செய்யலாம்," என, சேலத்தில் நடந்த முத்தரப்பு கூட்டத்தில் கலெக்டர் சந்திரகுமார் அறிவுறுத்தினார். கேரளாவை அடுத்து தமிழகத்தில் தான் மரவள்ளி கிழங்கு பயிரிடுவது அதிகம் உள்ளது. சேலம், நாமக்கல், விழுப்புரம், கடலூர், பெரம்பலூர் மாவட்டங்களில் விவசாயிகள் மரவள்ளியை அதிகமாக பயிரிட்டு வருகின்றனர். மரவள்ளி மூலம் தயாரிக்கப்படும் ஜவ்வரிசி, ஸ்டார்ச் போன்றவற்றுக்கு வடமாநிலங்களில் கிராக்கி அதிகம். அங்கு உணவுப் பொருளாக பயன்படுவதால் அவற்றை பதுக்கி வைத்து கூடுதல் விலைக்கு விற்பனை செய்யும் புரோக்கர் கூட்டம் அதிகம் உள்ளது.

மரவள்ளிக்கு உரிய விலை நிர்ணயம் வேண்டும். அரசு மூலம் ஸ்டார்ச் அளவு கணக்கிடும் கருவி அமைக்கப்பட வேண்டும். சேகோ சர்வில் விவசாயிகளையும் உறுப்பினர்களாக்க வேண்டும். ஜவ்வரிசி, ஸ்டார்ச் போன்றவற்றை மத்திய, மாநில அரசுகளே கொள்முதல் செய்ய வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டது. 2002ல் நடந்த முத்தரப்பு கூட்டத்துக்கு பின் கூட்டம் நடத்தப்படவில்லை. மரவள்ளி விவசாயிகளின் குறைகளை தீர்க்க முத்தரப்பு கூட்டத்தை நடத்த வேண்டும் என்ற கோரிக்கை அடிப்படையில் நேற்று சேலம் நாட்டாண்மை கழக கட்டிடத்தில் விவசாயிகள், அரசு அலுவலர்கள், சேகோ மற்றும் ஸ்டார்ச் உரிமையாளர்கள் பங்கேற்ற முத்தரப்பு கூட்டம் நடந்தது.

இடைத்தரகர் ஸ்கேல் அளவுக்கும், ஆலை அதிபர் ஸ்கேல் அளவுக்கும் இடையே பாயிண்ட் அளவு மாறுகிறது. அதனால் விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர். இடைத்தரகர்கள் அதிக கடனை வழங்கி விவசாயிகளை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளனர். ஆலை அதிபர்களே இடைத்தரகர்களை தூண்டி விடுகின்றனர் என விவசாயிகள் சங்க நிர்வாகிகள் பல்வேறு குற்றச்சாட்டுக்களை அடுக்கினர். மற்ற உணவுப் பொருட்கள் போன்று ஜவ்வரிசியையும் அரசே கொள்முதல் செய்ய வேண்டும். ஆலை கழிவு நீரை சுத்திகரித்து மின்சாரம் தயாரிக்க 50 சதவீத மானிய கடன் வழங்க வேண்டும். இடைத்தரகர்களை ஒழிக்க நாங்கள் உறுதுணையாக இருப்போம் என ஆலை அதிபர்கள் சங்க நிர்வாகிகள் தரப்பில் கூறப்பட்டது.

கூட்டத்துக்க தலைமை வகித்து கலெக்டர் சந்திரகுமார் பேசியதாவது: சேலம் மாவட்டத்தில் 28 ஆயிரம் ஏக்கர் பரப்பில் மரவள்ளி பயிரிடப்பட்டு வருகிறது. 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் சாகுபடி செய்கின்றனர். ஆண்டுதோறும் 10.36 லட்சம் மெட்ரிக் டன் உற்பத்தியாகிறது. மரவள்ளி கிழங்கு பயிர் கடனாக இந்த ஆண்டு மட்டும் 35.35 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகள் லாபம் ஈட்ட இடைத்தரகர்கள் இடையூறாக உள்ளனர் என்ற குற்றச்சாட்டு உள்ளது. ஆலை அதிபர்களே நேரடியாக கிழங்கு கொள்முதல் செய்வதாக கூறியுள்ளனர்.
ஆலை அதிபர்களுக்கும் மின்சாரம் தயாரிக்க மானிய கடனுதவி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இந்த முத்தரப்பு கூட்டம் இரு தரப்புக்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இடைத்தரகர்கள் இல்லாதபட்சத்தில் தான் உரிய விலை நிர்ணயம் செய்ய முடியும். இவ்வாறு அவர் பேசினார்.

அதிக எதிர்பார்ப்போடு வந்த விவசாயிகள் எந்த முடிவும் எடுக்கப்படாததால் விரக்தியுடன் திரும்பினர். உருப்படியாக ஏதும் நடக்கவில்லை மரவள்ளி விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் கோவிந்தசாமி கூறுகையில், ""முத்தரப்பு கூட்டத்தில் உருப்படியாக எதுவும் நடக்கவில்லை. வாரியம் அமைப்பது ஒன்று தான் உள்ளது.

இடைத்தரகர்களை ஒழிக்க வேண்டும் என கூறுகின்றனர். ஆனால், ஆலை உரிமையாளர்கள் தான் அவர்களை உருவாக்குகின்றனர். மரவள்ளி லோடு ஏற்றிச்செல்லும் லாரிகளில் மண்ணை அதிகமாக போட்டு, கிழங்குக்கான விலையை குறைத்து விடுகின்றனர். கூட்டுறவு சங்கங்களிலும் உரிய ஒத்துழைப்பு வழங்கப்படுவதில்லை. விலையை பொறுத்தமட்டில் தற்போது நல்ல விலை உள்ளது," என்றார்.

சேகோ மற்றும் ஸ்டார்ச் உரிமையாளர் சங்க மாநில தலைவர் துரைசாமி கூறுகையில், ""மரவள்ளி முத்தரப்பு கூட்டம்  கிழ்ச்சியளிக்கிறது. இடைத்தரகர்களை ஒழிக்க, விவசாயிகள் ஆலைகளுக்கு நேரடியாக கிழங்குகளை வழங்க வேண்டும். ஆலைகளின் கழிவு நீர் மூலம் மின்சாரம் தயாரிக்க 50 சதவீதம் மானிய கடனுதவி வழங்க கோரிக்கை விடுத்தோம். நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என கலெக்டர் தெரிவித்துள்ளார்," என்றார்.

**சொட்டுநீர் பாசன முறையில் கரும்பு சாகுடி செயல்விளக்கம்**

தஞ்சாவூர்:நிலத்தடி சொட்டுநீர் பாசன முறையில் கரும்பு பயிர் சாகுபடி குறித்த செயல்விளக்கம் மருங்கு ளம் அருகே பொய்யண்டார்கோட்டை கிராமத்தில் நடந்தது.குருங்குளம் சர்க்கரை ஆலை சார்பில் விவசாயி திருமலை என்பவருடைய வயலில் நடந்த செயல்விளக்க நிகழ்ச்சிக்கு சர்க்கரை ஆலை தலைமை நிர்வாகி மாணிக்கம் தலைமை வகித்தார். ஜெயின் சொட்டுநீர் பாசன நிறுவன துணைத் தலைவர் ஸ்டீபன் செயல்விளக்கம் செய்து காண்பித்தார். இயந்திரம் மூலமாக கிளை குழாய் அமைக்கப்பட்டு ஒரு அடி இடைவெளியில் 2 வரிசையாக கரும்பு நடவு செய்து காண்பிக்கப்பட்டது. மேலும் 30 ஹெச்.பி. டிராக்டர் கொண்டு இடை உழவு செய்யப்பட்டது. சொட்டுநீர் பாசனத்தின் நன்மைகள் குறித்து தென்னரசு விளக்கினார்.

தலைமை கரும்பு அலுவலர் குணசேகரன், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முதன்மை மேலாளர் ஜோதி, கள அலுவலர்கள் சரவணன், செந்தில், ரோகிணி, நளாயினி, அமலா உட்பட பலர் பேசினர். இதில் 150க்கும் அதிகமான விவசாயிகள் பங்கேற்று பயன் அடைந்தனர். விவசாயிகள் திருப்பதி, புண்ணியமூர்த்தி, ஆரோக்கியசாமி ஆகியோர் ஏற்புரை வழங்கினர். வினித்ரா ஏஜென்சி ஆரோக்கியசாமி நன்றி கூறினார்.

**காய்ப்பு குறைந்ததால் துவரை விவசாயிகள் பாதிப்பு : கேள்விக்குறியாகும் மானாவாரி சாகுபடி.**

ஆண்டிபட்டி : ஆண்டிபட்டி பகுதியில் சாகுபடி செய்யப்பட்டுள்ள துவரை செடிகளில் காய்ப்பு குறைந்துள்ளதால் விவசாயிகள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.
ஆண்டிபட்டி பகுதியில் தெப்பம்பட்டி, பாலக்கோம்பை, ராயவேலூர், ராமகிருஷ்ணாபுரம், அழகாபுரி, வண்டியூர், ராசக்காள் பட்டி உட்பட பல பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் மானாவாரி சாகுபடி செய்யப்படுகிறது. மானாவாரி சாகுபடியில் துவரை, நிலக்கடலை, பருத்தி, சிறுதானியம், பயறு வகைகள் அதிகம் உள்ளன.  ஜூலை, ஆகஸ்ட் களில் பெய்த மழையை பயன்படுத்தி விதைக்கப் பட்டு ஜனவரி, பிப்ரவரி யில் அறுவடை துவங்கும். இப்பகுதி விவசாயிகள் பல ஏக்கர் நிலங்களில் இந்த ஆண்டும் துவரை சாகுபடி செய்துள்ளனர்.

துவரை பத்து மாத பயிர் என்பதால் அவ்வப்போது பெய்த மழையை பயன்படுத்தி செடிகளை வளர்த்து பராமரிப்பு செய்து வந்தனர். புழு, பூச்சி தாக்குதலுக்கு பல மருந்துகளை பயன்படுத்தினர். எட்டு முதல் பத்து மாதம் ஆகியும் உயரமாக வளர்ந்த பல செடிகளில் பூ எடுக்கவில்லை. அறுவடை எடுக்க வேண் டிய நேரம் வந்தும் எதிர்பார்த்த அளவு பலன் கிடைக்காததால் விவசாயிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

விவசாயி ஞானபாரதி கூறுகையில், இந்த ஆண்டும் வழக்கம்போல் பல விவசாயிகளும் துவரை சாகுபடியில் அதிக கவனம் செலுத்தி வந்தனர். ஆண்டிபட்டி பகுதியில் குறைவான மழையே பெய்தது. பெய்த மழையும் சாகுபடி பயிருக்கு தேவையான நேரத்தில் கிடைக்கவில்லை.

பருவம் தவறி பெய்த குறைவான மழையால் மானாவாரி சாகுபடி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. காய்ப்புத்தன்மை இல்லாததால் விவசாயிகள் பலரும் துவரை செடிகளை வெட்டி அழித்து விட்டனர். ஏற்கனவே இப்பகுதியில் விவசாயம் நலிந்து வரும் நிலையில் மானாவாரி விவசாயமும் இந்த ஆண்டு பாதிப்பை ஏற்படுத்தி விட்டது என்றார்.

**மீன்வளக்கல்லூரியில் அலங்கார மீன்வளர்ப்பு பயிற்சி வரும் 20ம் தேதி துவக்கம்**

தூத்துக்குடி : தூத்துக்குடி மீன்வளக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் அலங்கார மீன்வளர்ப்பு தொழில்நுட்ப பயிற்சி வரும் 20ம் தேதி துவங்குகிறது.இதுகுறித்து மீன்வளக்கல்லூரி முதல்வர் (பொறுப்பு) ஜேம்சன் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: தூத்துக்குடி மீன்வளக்கல்லூரியில் வரும் 20ம் தேதிமுதல் 22ம் தேதி வரை நன்னீர் அலங்கார மீன்வளர்ப்பு தொடர்பாக மூன்று நாள் பயிற்சி நடக்கிறது.இப்பயிற்சி கல்லூரியின் மீன்வள விரிவாக்கத்துறையினரால் இது நடத்தப்படுகிறது.

பயிற்சியில் பல்வேறு நன்னீர் அலங்கார மீன் இனங்கள், அவற்றின் உற்பத்தி மற்றும் அலங்கார மீன் பண்ணை மேலாண் மை குறித்த தொழில் நுட்பங்கள் செயல்முறை விளக்கங்களோடு நடத்தப்பட உள்ளன. இப்பயிற்சியில் கலந்துகொள்பவர்களுக்கு பயிற்சிபெற்றதற்கான சான்றிதழ் வழங்கப்படும்.பயிற்சியில் கலந்துகொள்ள ஆர்வம் உள்ளவர்கள் தங்களது பெயர்களை முன்பதிவு செய்துகொள்ளவேண்டும். இவ்வாறு அவர் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வேளாண்மை கல்லூரியில் முத்தமிழ் விழா**

வல்லநாடு : கிள்ளிகுளம் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் வெள்ளி விழா ஆண்டு முத்தமிழ் விழா நடந்தது.விழாவிற்கு பேச்சாற்றல் மன்ற ஆலோசகர் குரு வரவேற்றார். விழா நிகழ்ச்சிகளை தமிழ்நாடு வேளாண்மை பல்கலை கழக பதிவாளர் சுப்பையன் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார். இதில் கல்லூரி வளாகத்தில் மாணவர்களால் மணலில் உருவாக்கப்பட்ட பாரதியார் மற்றும் திருவள்ளுவர் சிலைகள் வித்தியாசமான படைப்பாக அனைவராலும் பாராட்டப்பட்டது.விழாவிற்கு கல்லூரியின் முதல்வர் ராஜராஜன் தலைமை வகித்து பேசினார். இதனை தொடர்ந்து நெல்லை ஜெயந்தாவின் உலகம் பிறந்தது உனக்காக சிறப்பு சொற்பொழிவு, மாணவர்களின் முத்துச் சிதறல் நிகழ்ச்சி, முத்தமிழ் ஆண்டுமலர் தமிழருவி வெளியீட்டு விழா நடந்தது.

இதனை தொடர்ந்து பேராசிரியர் பெரியார்தாசனின் நாளைய விவசாயம் உங்கள் கையில் என்ற சிந்தனை சொற்பொழிவு நடந்தது.பின்னர் நகைச் சுவை பட்டிமன்றம் மற்றும் வாசுகிமனோகரனின் பாட்டு மன்றம் நிகழ்ச்சி நடந்தது. இந்நிகழ்ச்சிகளில் மாணவர் மன்ற ஆலோசகர் சுந்தர்சிங்ராஜபாண்டியன் மற்றும் பேராசிரியர்கள் பொன்னையா, செல்வி, டேவிட், சோமசுந்தரம் உட்பட ஏராளமானோர்கள் கலந்து கொண்டனர். பேச்சாற்றல் மன்ற செயலர் ரஞ்சித் நன்றி கூறினார்.

**நெற்பயிரில் குலையநோய்கட்டுப்படுத்தும் முறைகள்* வேளாண் அதிகாரி விளக்கம்**

தென்காசி : நெற்பயிரை தாக்கும் குலையநோயை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து தென்காசி வேளாண்மை உதவி இயக்குநர் ஐரிஷ்சேகர் விளக்கம் அளித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:தென்காசி வட்டாரத்தில் சுமார் 3 ஆயிரத்து 500 ஹெக்டேர் பரப்பளவில் நெற்பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இப்பயிரில் பண்பொழி, வடகரை பகுதியில் குலையநோய் தாக்குதல் தென்படுகிறது. இந்நோயானது முதலில் வெள்ளை நிற அல்லது வெளிறிய பச்சை நிற புள்ளிகளாக இலைகளில் தோன்றும். சில நாட்களில் சாம்பல் நிற மையப்பகுதியையும் அதை சுற்றி கரும்பழுப்பு நிறத்தையும் கொண்ட புள்ளிகளாக மாறும். இந்நோய் முற்றிய நிலையில் நீண்ட கூன்வடிவ புள்ளிகளையும், அதனை சுற்றி காய்ந்த பகுதியையும் கொண்டதாக இருக்கும்.இப்புள்ளிகளின் மையப்பகுதி அகலமாகவும் இருபுறங்களிலும் சிறுத்தும் காணப்படும். இந்நோய் தீவிரமடையும் போது புள்ளிகள் ஒன்றோடொன்று சேர்ந்து இலைகள் காய்ந்து விடும். இந்நோயின் அறிகுறிகள் இலை மட்டுமல்லாது கதிர் காம்பு மற்றும் கதிர்களிலும் காணப்படும். கதிர் காம்பு பாதிக்கப்படும் போது காம்பு ஒடிந்து விடும். விதைகள் உருவாகாது. வெள்ளை நிற பதர்களாக கதிர் மாறிவிடும்.

சாதக சூழ்நிலைகள் : குலையநோய் உருவாக காரணமான நோய் கிருமிகள் ஆண்டு முழுவதும் காற்றில் இருக்கிறது. காற்றில் உள்ள இக்கிருமிகள் இலைகளில் விழுந்து சாதகமான சூழல் நிலவும்போது அல்லது பயிர் நோய் எதிர்ப்பு தன்மை குறைவாக இருக்கும் போது முளைத்து இலையினுள் செல்கிறது. இந்த பூஞ்சாணம் இலையினுள் வளர்ந்து 5 நாட்களில் இலைப் புள்ளிகளாக தெரிய துவங்கும். இந்த கிருமி வளர்ந்த நிலையில் பனித்திவலைகளினாலும், மழைத்துளிகளினாலும் வித்துகள் வெளிப்பட்டு மற்ற செடிகளுக்கு காற்றின் மூலம் பரவி நோயை உண்டாக்கும்.குறைந்த இரவு நேர வெப்பநிலை, பனிக்காலம், காற்றில் அதிக ஈரப்பதம் இருப்பது இந்த நோய் தோன்ற சாதமான சூழ்நிலையாகும். வானம் மப்பும் மந்தாரமுமாக இருப்பது, விட்டு விட்டு தூரல் விழுவது, ஈரமான நிலையில் இலைகள், அதிக அளவில் தழைச்சத்தை இடுவது இந்நோய் தோன்ற பிற சாதகமான சூழ்நிலைகளாகும். இந்நோய் நெற்பயிரை மட்டுமின்றி கோரை, அருகம்புல் போன்ற களை செடிகளையும் தாக்கும். இதனால் இக்களை செடிகள் வயலில் இருப்பது இந்நோய் தோன்றி பரவ ஏதுவாகும்.

நிர்வாக உத்திகள் : குலையநோய்க்கு புகலிடமாக இருக்கும் களைகளை வரப்பு மற்றும் பாசன வாய்க்காலில் இருந்து அப்புறப்படுத்த வேண்டும். சீரிய முறையில் உர நிர்வாக உத்திகளை பின்பற்றுவதன் மூலம் இந்நோயிலிருந்து பயிரை காக்கலாம். தழைச்சத்தை அதிக அளவில் இடாமல் பயிரின் தேவையறிந்து இட வேண்டும். தழைச்சத்தை இலை வண்ண அட்டை உதவியுடன் பயிருக்கு தேவைப்படும் தருணத்தை அறிந்து இட வேண்டும். இலைவண்ண அட்டை பயன்படுத்த முடியாவிட்டால், தழைச்சத்தை மூன்று முறையாக பிரித்து அடியுரம், தூர்கட்டும் பருவம் மற்றும் கதிர் வெளிவரும் பருவம் ஆகிய தருணங்களில் இட வேண்டும்.சூடோமோனாஸ் புளோரசன்ஸ் 400 கிராம் மருந்தை நீரில் கரைத்து 200 லிட்டர் அளவு நீரில் கலந்து ஒரு ஏக்கர் பரப்பில் நோய் அறிகுறிகள் தென்படும் போதும், நோயின் தீவிரத்தை பொருத்து 10 நாட்கள் இடைவெளியிலும் மூன்று முறை தெளிக்க வேண்டும். எடிபன்பாஸ் 200 மில்லி, கார்பண்டாசிம் 100 கிராம், டிரைசைக்ளோசல் 200 கிராம், இப்ரோபென்பாஸ் 200 கிராம் இவற்றில் ஏதேனும் ஒன்றை ஒரு ஏக்கர் பரப்பில் தெளித்து கட்டுப்படுத்தலாம். வருங்காலங்களில் சூடோமோனாஸ் 10 கிராம் மருந்தை ஒரு கிலோ விதையுடன் கலந்து விதைப்பதன் மூலம் 40 நாட்கள் வரை இந்நோய் தாக்குவதிலிருந்து பயிரை காக்கலாம். குலைநோய் எதிர்ப்பு ரகங்கள் மற்றும் எளிதாக தாக்குதலுக்குள்ளாகும் ரகங்கள் பற்றி தென்காசி வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தை அல்லது இப்பகுதி உதவி வேளாண் அலுவலர்களை தொடர்பு கொண்டு விவசாயிகள் அறிந்து கொள்ளலாம் என வேளாண்மை உதவி இயக்குநர் ஐரிஷ்சேகர் அறிக்கையில் கூறியுள்ளார்.

**கரும்பு நடவு செய்ய ரூ. 1 லட்சம் கடனுதவி**

ஆரணி: சிறுமூர் துல்லிய விவசாய பண்ணை உறுப்பினர்கள் கரும்பு நடவு செய்ய ரூ.ஒரு லட்சத்திற்கான காசோலை வழங்கப்பட்டது. ஆரணி அடுத்த சிறுமூர் கிராமத்தில் துல்லிய விவசாய பண்ணை இயங்கி வருகிறது. இதில் உறுப்பினர்களாக 20 பேர் உள்ளனர். இவர்கள் தங்களுடைய 2.5 ஏக்கர் நிலத்தில் கரும்பு நடவு செய்ய தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் கடன் (காசோலை) உதவி வழங்கும் நிகழ்ச்சி ஆரணி ஒன்றிய அலுவலகத்தில் நேற்று நடந்தது.

நிகழ்ச்சிக்கு ஆரணி வேளாண்மை உதவி இயக்குனர் செல்வராஜ் தலைமை வகித்தார். துல்லிய விவசாய பண்ணை தலைவர் ரகுபதி முன்னிலை வகித்தார். ஒன் றிய பொருளாளர் ராஜேந்திரன் வரவேற்றார். ஆரணி திமுக ஒன்றிய செயலாளர் அன்பழகன் விவசாயிகள் 20 பேருக்கு தலா 5 ஆயிரம் வீதம் மொத்தம் ஒரு லட்சத்திற்கான காசோலையை விவசாயிகளிடம் வழங்கினார். நிகழ்ச்சியில் துல்லிய விவசாய பண்ணை செயலாளர் பாண்டுரங்கன், பொருளாளர் ஜனார்த்தனன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

திருவாரூர் மாவட்டத்தில் 5 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயம்:கலெக்டர் தகவல்

திருவாரூர்:திருவாரூர் மாவட்டத்தில் நடப்பாண்டு 5 லட்சத்து 69 ஆயிரம் டன் நெல் கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று கலெக்டர் சந்திரசேகரன் தெரிவித்தார்.திருவாரூர் மாவட்டத்தில் நுகர்பொருள் வாணிபக்கழகம் சார்பில் நெல் கொள்முதல் செய்வது குறித்த ஆலோசனைக்கூட்டம் நடந்தது. இதில் தலைமை வகித்து கலெக்டர் சந்திரசேகரன் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:திருவாரூர் மாவட்டத்தில் தற்போது கொள்முதல் நிலையங்கள் மூலம் கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயித்து அதற்காக 370 கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு தேவையான பணியாளர்களும் பணியமர்த்தப்பட்டுள்ளனர். எனவே பொதுமக்கள் கொள்முதல் நிலையங்களில் சரியான எடைக்கு நெல்லை விற்று உடனுக்குடன் பணம் பெற்றுக்கொள்ளலாம்.தற்போது சன்னரக நெல்லிற்கு குவிண்டாலுக்கு ஆயிரத்து 50 ரூபாயும், பொது ரகத்திற்கு ஆயிரம் ரூபாயும் வழங்கப்படுகிறது. மேலும் தற்போது அரசு அறிவித்துள்ள 50 ரூபாயும் கூடுதலாக பெற்றுத்தர உரிய நடவடிக்கை எடுக்கப்படும். கடந்தாண்டு குறுவை சாகுபடியில் 5 லட்சத்து 10 ஆயிரம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு 525 கோடியே 37 லட்ச ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

அதேபோல் நடப்பாண்டு 5 லட்சத்து 69 ஆயிரம் டன் நெல் கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு அதில் இதுவரை 14 லட்சத்து 184 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு 15 கோடி ரூபாய் பணம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. மாவட்டத்தில் உளுந்துப்பயிர் பயிரிட 250 டன் விதை தேவை என்ற நிலையில் தற்போது 230 டன் கையிருப்பில் உள்ளது. இந்தாண்டு நெல் உற்பத்தி அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதால் தேவைக்கு ஏற்ப கூடுதலாக கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும்.இவ்வாறு அவர் கூறினார்.டி.ஆர்.ஓ., ஜான் லூயிஸ், நுகர்பொருள் வாணிபக்கழக முதுநிலை மண்டல மேலாளர் பிரான்சிஸ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**தரமான நெல் விதை உற்பத்தி விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்**

அரக்கோணம்:செம்பேடு கிராமத்தில் வேளாண்மை துறை சார் பில், தரமான நெல் விதை உற்பத்தி செய்வது குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.காவேரிப்பாக்கம் அடுத்த செம்பேடு கிராமத்தில், தமிழ்நாடு வேளாண்மை துறை சார்பில், விதை கிராம திட்டத்தின் கீழ், தரமான நெல் விதை உற்பத்தி செய் வது குறித்து விவசாயிகளு க்கு பயிற்சி அளிக்கப்பட் டது.

இப்பயிற்சியை செம்பேடு விஏஓ., கஸ்தூரிரங்கன் தலைமை வகித்து, துவக்கி வைத்தார். தொடக் கப்பள்ளி தலைமை ஆசிரியர் குட்டி முன்னிலை வகித் தார். இச்சிப்புத்தூர் வேளாண்மை உதவி அலுவலர் திருக்குமார் வரவேற்றார்.வேளாண்மை அலுவலர் பாபு, வேளாண்மை தொழில்நுட்பங்கள் குறித்து பேசினார்.

காவேரிப்பாக்கம் வேளாண்மை உதவி இயக்குனர் ஜெயச்சந்திரன், தரமான விதை உற்பத்தி தொழில் நுட்பங்கள், விதை நேர்த்தி, களை எடுத்தல், பயிர் பாதுகாப்பு, செம்மைநெல் சாகுபடி, விதை சேமிப்பு மற்றும் அரசு வழங்கும் மானிய திட் டங்கள் குறித்து பேசினார்.வேளாண்மை உதவி அலுவலர் திருக்குமார், நெல் விதைக்கு உயிர் உர (அசோ ஸ்பைரில்லம்) விதை நேர்த்தி செயல்விளக்கம் செய்து காட்டினார். இந்நிகழ்ச்சியில், செம்பேடு மற் றும் அதை சுற்றியுள்ள கிராமங்களை சேர்ந்த 50 விவசாயிகள் கலந்து கொண்டனர்.வேளாண்மை உதவி அலுவலர் செல்வகுமார் நன்றி கூறினார்.

**செஞ்சி ஒழுங்குமுறை விற்பனை கூடம் விரிவு படுத்திட விரைவில் நடவடிக்கை : விற்பனை குழு செயலாளர் தகவல்**

செஞ்சி : செஞ்சி ஒழுங்குமுறை விற்பனை கூடம் விரைவில் விரிவு படுத்தப்படும் என மாவட்ட விற்பனை குழு செயலாளர் தெரிவித்துள்ளார். செஞ்சி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் இடப் பற்றாக்குறை, தொழிலாளர் பற்றாக்குறை காரணமாக நேற்று முன்தினம் விவசாயிகள் கொண்டு வந்த நெல் மூட்டைகளை திருப்பி அனுப்பினர். அனுமதிக்கப்பட்ட 15 ஆயிரம் நெல் மூட்டையிலும், 500 விவசாயிகளின் 6,000  மூட்டைகளை மட் டுமே ஏலத்தில் அனுமதித்தனர்.  விவசாயிகள் புதிதாக நெல் மூட்டைகளை கொண்டு வர வேண்டாம் என கமிட்டி நிர்வாகத்தினர் அறிவித்திருந்தனர். இது விவசாயிகளிடம் அதிருப்தியை ஏற்படுத்தியது. நேற்று மாவட்ட ஒழுங்குமுறை விற்பனை கூட செயலாளர் சண்முகம் செஞ்சி கமிட்டியில் திடீர் ஆய்வு செய்தார். நிலுவையில் இருந்த 726 விவசாயிகளின் 9,000 மூட்டைகளையும் ஏலத்தில் அனுமதிக்க உத்தரவிட்டார்.
இதையடுத்து வியாபாரிகள் சங்க பிரதிநிதிகள், தொழிலாளர்களுடன்  ஆலோசனை நடத்தினார். பின்னர் நிருபர்களிடம் அவர் கூறியதாவது: செஞ்சி கமிட்டியில் இடபற்றாக்குறையை சரி செய்ய, கமிட்டியை ஒட்டி பின்புறம் உள்ள 1.5 ஏக்கர் புறம்போக்கு இடத்தில் விரிவு படுத்தப்படும், இதற் கான நடவடிக்கை எடுக்க கலெக்டர் உத்தரவிட் டுள்ளார். மேல்சித்தாமூரில் புதிதாக கமிட்டி துவங்க 2.6 ஏக்கர் நிலம் வாங்கப்பட் டுள்ளது என செயலாளர் சண்முகம் கூறினார். '

**புழு, சொத்தை இல்லாத கத்தரிக்காய் கண்டுபிடிப்பு**
பதிவு செய்த நாள் 1/9/2010 12:02:06 AM



பேரவையில் நேற்று கேள்வி நேரத்தின் போது காஞ்சிபுரம் கமலம்மாள் (பாமக), சிவபுண்ணியம் (இந்திய கம்யூனிஸ்ட்), மதுரை (கிழக்கு ) நன்மாறன் (மார்க்சிஸ்ட்), கோபிச்செட்டிபாளையம் செங்கோட்டையன் (அதிமுக), கடையநல்லூர் பீட்டர் அல்போன்ஸ் (காங்.) ஆகியோரின் கேள்விகளுக்கு வேளாண் துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் அளித்த பதில்:

மரபணு கத்தரிக்காயை இன்னும் பயன்படுத்தவில்லை. நமது மாநிலத்தில் அது நடைமுறைக்கு வரவில்லை. நமது வேளாண் துறை ஆராய்ச்சி மையத்தில், புழு, சொத்தை இல்லாத கத்தரிக்காயை தயாரித்து வருகின்றனர். அதுதொடர்பான ஆய்வை நமது விஞ்ஞானிகள் குழு டெல்லிக்கு அனுப்பி உள்ளது. அந்த கத்தரிக்காயில் பக்க விளைவு இல்லை. இதை பரிசீலிக்கலாம் என்று மத்திய விஞ்ஞானிகள் குழு பரிந்துரை செய்துள்ளது. மத்திய அரசு அதுகுறித்து தமிழகத்துக்கு அனுமதி தரும் பட்சத்தில் அந்த கத்தரிக்காயை நாமும் உற்பத்தி செய்ய முடியும். கடந்த 1996ல் மரபணு விதைகளுக்கு கடும் எதிர்ப்பு கிளம்பியது. அப்போது முதல்வர் கருணாநிதி, அந்த விதையை பயிர் செய்து பாதிப்பு எதுவும் வருமா என்று கேட்டார். அதன் அடிப்படையில் ஆராய்ச்சி செய்து பாதிப்பு இல்லை என்று தெரிந்தும் இன்னும் தமிழகத்தில் அனுமதிக்கவில்லை. மரபணு கத்தரிக்காய்க்கு பதில் நமது விஞ்ஞானிகள் 3 ஆண்டு ஆராய்ச்சிக்கு பிறகு புதிய கத்திரிக்காயை கண்டுபிடித்துள்ளனர். ஒரு முறை மட்டுமே பயன்படுத்தப்படும் மரபணு விதை கிலோ ரூ.1,500. இதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் ரூ.750 என்று தீர்ப்பளிக்கப்பட்டது. மரபணு விதைகளுக்கு அரசு எந்த ஆதரவும் தெரிவிக்கவில்லை. விவசாயிகளுக்கு பயனாக இருந்தால் அதை ஏற்கலாம்.

**எல்லா விவசாயிகளுக்கும் 6% வட்டியில் பயிர் கடன்**

பதிவு செய்த நாள் 1/9/2010 12:06:28 AM



புதுடெல்லி : நாடு முழுவதும் அனைத்து விவசாயிகளுக்கும் 6 சதவீத வட்டியில் பயிர் கடன் வழங்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

இதுபற்றிய அறிவிப்பு அடுத்த மாத பொது பட்ஜெட்டில் இடம்பெறுகிறது. டெல்லியில் மத்திய நிதி அமைச்சக உயரதிகாரி ஒருவர் நேற்று இதைத் தெரிவித்தார். விவசாயிகளுக்கு இப்போது 7 சதவீத வட்டியில் பயிர் கடன் அளிக்கப்பட்டு வருகிறது.

அசலையும், வட்டியையும் சரியாக திருப்பிச் செலுத்தும் விவசாயிகள் மீண்டும் கடன் பெறும்போது ஒரு சதவீத வட்டி தள்ளுபடி செய்யப்பட்டு 6 சதவீத வட்டியில் கடன் வழங்கப்படுகிறது. மற்ற விவசாயிகள் பெறும் கடனுக்கு 7 சதவீத வட்டி விதிக்கப்படுகிறது. இதை மாற்றி, அனைத்து விவசாயிகளுக்கும் பயிர் கடன் வட்டியில் 1 சதவீதத்தை குறைக்க நிதி அமைச்சகம் பரிசீலித்து வருகிறது.

பயிர் கடன் வட்டியை மேலும் ஒரு சதவீதம் குறைப்பதால் அரசுக்கு நிதிச் சுமை ஏற்படும். அதை சமாளித்து இந்த திட்டத்தை அமல்படுத்தும் வழிகளை ஆராய்ந்து வருவதாக பெயர் வெளியிட விரும்பாத நிதி அமைச்சக அதிகாரி தெரிவித்தார்.

ரூ.3 லட்சம் வரை பெறப்படும் குறுகிய கால பயிர் கடனுக்கு வட்டி மீது தொடர்ந்து மானியம் அளிக்கப்பட்டு 7 சதவீத வட்டி நீடிக்கும் என்று கடந்த பட்ஜெட்டில் மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி அறிவித்தார். கடந்த ஆண்டில் வட மாநிலங்களில் பருவ மழை குறைவாக பெய்ததால் விவசாய உற்பத்தி குறைந்துள்ளது. எனினும், விவசாய வளர்ச்சியை குறைந்தது 4 சதவீதமாக்க அத்துறை மீது அதிக கவனம் செலுத்த வேண்டிய அவசியம் பற்றி பிரணாப் ஏற்கனவே வலியுறுத்தினார். இப்போது 1 சதவீத வட்டி குறைப்பு மூலம் விவசாய வளர்ச்சியை உறுதி செய்ய மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

**நிலக்கடலை சாகுபடியில் கூடுதல் மகசூல் பெற விவசாயிகளுக்கு ஆலோசனை**
பதிவு செய்த நாள் 1/9/2010 12:38:39 AM

திண்டுக்கல் : நிலக்கடலை சாகுபடியில் கூடுதல் மகசூல் பெறுவதற்கான வழிமுறைகள் குறித்து வேளாண்மை இணை இயக்குனர் சங்கரலிங்கம் விவசாயிகளுக்கு ஆலோசனை கூறியுள்ளார்.
மாவட்டத்தில் பருவமழை பெய்ததைத் தொடர்ந்து கிணறுகளில் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. இந்த தண்ணீரை பயன்படுத்தி தற்போது மார்கழிப் பட்டத்தில் தோட்டக்கால் நிலங்களில் நிலக்கடலை சாகுபடி செய்யலாம்.

இதற்காக டிஎம்வி 2, டிஎம்வி 7, கோ 2, விஆர்ஐ 2, விஆர்ஐ 3, விஆர்ஐ 4 ரகங்களை தேர்வு செய்து விதைக்கலாம். ஒரு ஏக்கருக்கு நன்கு திரட்சியான, சுருக்கம் இல்லாத பருப்புகள் 50 கிலோ தேவைப்படும்.
விதை மூலம் பரவும் இலைப்புள்ளி, வேர்அழுகல் மற்றும் கழுத்து அழுகல் போன்ற பூஞ்சான நோய்களை தடுக்க ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் வீதம் கார்பன்டாசிம் கலந்து 24 மணி நேரம் வைத்திருந்து பின் விதைக்க வேண்டும். அல்லது ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் வீதம் டிரைக்கோடெர்மா விருடி என்ற உயிரியல் பூஞ்சான் மருந்தை விதைப்பதற்கு முன் கலக்கி, பின் நன்கு வாளிப்பான செடிகளை பெற ஒரு ஏக்கர் விதைக்கு ஒரு பாக்கெட் ரைசோபியம் நுண்ணுயிர் கலவையை போதுமான அளவு அரிசி கஞ்சியுடன் கலந்து நிழலில் உலர வைத்து பின்பு விதைக்க வேண்டும்.

அடியுரமாக கடைசி உழவில் ஒரு ஏக்கருக்கு 5 டன் தொழுஉரம் இடவும். ரசாயன உரங்கள் மண் பரிசோதனை ஆய்வு முடிவுப்படி இட வேண்டும். அல்லது பொது சிபாரிசான தழை, மணி, சாம்பல் சத்துக்களை 7:14:21 என்ற விகிதத்தில் யூரியா&15 கிலோ, சூப்பர் 88 கிலோ, பொட்டாஷ் 35 கிலோ என்ற அளவில் உரங்களையும் ஜிப்சம் 8 கிலோவையும் இட்டு பாத்திகளை அமைக்க வேண்டும்.

4 பாக்கெட் ரைசோபியம், 4 பாக்கெட் பாஸ்போபேக்டீரியா நுண்ணுயிர் உரங்களை 10 கிலோ தொழுஉரம் மற்றும் 10 கிலோ மணலுடன் கலந்து விதைப்பதற்கு முன் பாத்திகளில் சீராக இட வேண்டும். பின்பு 30*10 செமீ இடைவெளியில் சதுரமீட்டருக்கு 33 செடிகள் இருக்குமாறு விதைக்க வேண்டும்.
விதைத்தவுடன் ஏக்கருக்கு 5 கிலோ நிலக்கடலை நுண்ணுர கலவையை 20 கிலோ மணலுடன் கலந்து பாத்திகளின் மேல் சீராக தூவவும். விதைத்த 20 மற்றும் 40ம் நாட்களில் களை எடுக்க வேண்டும். 2ம் களையெடுக்கும் முன் மேலுரமாக ஜிப்சம் 80 கிலோவை இட்டு மண் அணைக்கவும். இதில் ஊடுபயிராக தட்டைப்பயறு, உளுந்து, பாசிப்பயறு, துவரை, கம்பு, சூரியகாந்தி, எள் போன்ற பயிர்களை சாகுபடி செய்யலாம்.
நிலக்கடலையில் பருப்பு திரட்சியாக முழுமையாகப் பிடித்து அதிக மகசூல் பெறுவதற்காக ஏக்கருக்கு டிஏபி 1 கிலோ, அம்மோனியம் சல்பேட் 400 கிராம், போராக்ஸ் 200 கிராம் 3 உரங்களையும் 15 லிட்டர் நீரில் கலந்து ஒரு இரவு முழுவதும் ஊற வைக்கவும். மறுநாள் வடிகட்டிய கரைசலுடன் பிளானோபிக்ஸ் 140மிலி சேர்த்து 200லிட்டர் தண்ணீரில் கலந்து விதைத்த 25ம் நாள் மற்றும் 35ம் நாள் 2 முறை கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும். மேற்காணும் தொழில்நுட்பங்களை கடைபிடித்து நிலக்கடலை சாகுபடியில் அதிக மகசூல் பெற்று பயனடையுமாறு வேளாண்மை இணை இயக்குனர் சங்கலிங்கம் தெரிவித்துள்ளார்.